குறுக்குத்துறை ரகசியங்கள்

நெல்லை கண்ணன்

பாகம் - 2

வேலுக்கண்ணன் பதிப்பகம்



குறுக்குத்துறை ரகசியங்கள்

நெல்லை கண்ணன்

பாகம் - 2

வேலுக்கண்ணன் பதிப்பகம்
69, அம்மன் சந்நிதி தெரு,
திருநெல்வேலி நகரம் - 627 006.
தொலைபேசி : 0462 - 2337734

முதற் பதிப்பு - ஜனவரி, 2017
இரண்டாம் பதிப்பு - செப்டம்பர் 2021

KURUKKUTHURAI RAKASIYANGAL
PART 2

Nellai Kannan
Tamil
First Edition - Jan 2017
Second Edition - Sep 2021

Velukkannan Pathipagam,
69, Amman Sannathi Street, Tirunelveli - 627 006.
Ph : 0462 - 2337734

Laser & Printing :
Eluthukalaiyagam, Tirunelveli 9443484300

Rs. 150/-



எல என்ன காலேல யே வந்து நிக்கே. வாச்மேனில்லையா.

இல்ல அண்ணாச்சி நம்ம வளையல் கட சேட் பெரிய வீட்டுச் சாலாஜியாப் பாக்கணும்ன்னார். வாசலிலே நிக்கார். அது என்னண்ணாச்சி சாலாஜின்னா.

எல அவங்கிட்ட எப்படிப் பழக்கம். அங்கனயும் போயி பிச்சை யெடுத்திட்டியா.

இல்ல அண்ணாச்சி அவர் கட கிட்டதான நம்ம பிச்சையா சைக்கிள் கட வச்சிருக்காம். ஒரு நா அங்கன போயி சைக்கிள் எடுக்கப் போனேன். அவராத்தான் என்னயப் பாத்து பெரிய வீட்டுச் சாலாஜியோ இருப்பீங்கள்ளா தம்பி. உள்ள வாங்கண்ணார். ஒரு டீ குடுத்தாரு அண்ணாச்சி. அந்த டீக்காக அடிக்கடி அங்கன போயிப் பழக்கம் ஆயிடுச்சி அண்ணாச்சி. அது சரி அண்ணாச்சி சாலாஜின்னா என்ன அர்த்தம்.

எல மூதேவி அத்தான்னு அர்த்தம்டா.

வாசல்ல நிக்காரு என்ன செய்ய.

எல துண்ட மாத்திட்டு வேட்டியக் கட்டிட்டு வாரேம். முன் ரூம்ல ஒக்காரச் சொல்லு.

சரிதாம் அண்ணாச்சி இப்படியே ஒங்களப் பாத்தா பன்றி மலைச்சாமின்னு நெனச்சு கும்பிட்டுரப் போறாரு.

காலையில வாரியலடி படணும்ன்னு வந்திருக்கியால.

என்ன ரமண்லால் நல்லா இருக்கியா. தங்கச்சி புள்ளைகள்ளாம் நல்ல இருக்கா.

அதுக்கென்ன சாலாஜி எல்லாரும் நல்லாத்தாம் இருக்காங்க.

வெடியக்காலமே வந்திருக்கீரே. என்ன விசேசம்.

அண்ணிக்கே அம்பி சார்ட்ட சொன்னேனே!.

அந்தப் பய ஒம்ம வீட்டு டீயை பத்தித்தான் சொன்னான். இன்னிக்குத்தான் நீரு வாசலுக்கு வந்தப்புறம்தாம் வாயைத் தொறக்காம் சொல்லும்.

மச்சான் ஒங்க தங்கச்சிதான் அண்ணாச்சி கிட்ட போயிச் சொல்லிட்டு வாருங்கண்ணா. அவளும் வாரேன்னுதாம் சொன்னா. நாந்தாம் நானே போயிச் சொல்லிட்டு வாரேண்ணு சொன்னேன்.

என்ன விசயம் மாப்பிள?

நம்ம பலசரக்குக் கட சுப்பையா இருக்காருல்லா. அவரு மகன் நெல்லையப்பன். ஒங்க செல்ல மருமக மஞ்சு காலேஜ் போகும் போதெல்லாம் பின்னாலயே போயி சங்கடப்படுத்துதாம். அதாம் சொல்லிட்டுப் போகலாம்ன்னு வந்தேம்.

சரி விடும் நாம் பாத்துக்கிடுதேம். நிம்மதியாப் போயிட்டு வாரும்.

நானே ஒங்ககிட்ட சொல்லணும்ன்னு நெனச்சேம் பாஸ். ஒரு நேரம் போல ஒரு நேரம் இருக்க மாட்டிகள்ளா நீங்க, அதாம் சொல்லல.

எல பாஸ்ண்ணு சொல்லாதேண்ணு எத்தன தரம் சொல்லியும் அறிவில்லையால. ஒனக்குத் தெரிஞ்சிருந்தும் சொல்லலண்ணா நெல்லையப்பன் பயகிட்டேயும் சீட்டிங் எதும் போட்டுக்கிட்டிருந்தயால,

என்ன நீங்க என்னைக்கு நம்பியிருக்கியோ

சரி நாயே! போ போயி சுப்பையா பயலயும் அவம் மகனையும் கையோட கூட்டிட்டு வா.

•

என்னவே சுப்பையா பிள்ளை கூப்பிட்டாத்தாம் அண்ணாச்சி நெனவு வரும் என்னவே. பன்னம்பாறைக்காரி எப்படி இருக்கா.

ஆமா பன்னம்பாறைக்காரில்லாம் நீங்க குடுக்கிற செல்லத்துல குளிர் விட்டுப் போயிருக்கா. எல்லா பொம்பளகளும் அப்படித்தான் ஊருக்குள்ள இருக்காளுவ.

எல எங்க அம்மே போய்ச் சேர்ந்ததுக்கப்புறம் வத்தக் குழம்புக்கு அலந்த போதெல்லாம் அவ எங்கம்மையாயில்லாடா வத்தக் குழம்பு குடுத்து விடுவா. பொம்பளப்புள்ளகள புரிஞ்சுகிட்டாத்தான் தொல்லையில்ல. எவம் புரிஞ்சுக்கிடுதீய. அண்ணாச்சிதான் காரணம்ன்னு ஊரு கூடித் தீர்மானம் போடுங்களேண்டே.

ஏய் நெல்லையப்ப பிள்ளை என்ன படிக்கீரு.

அவரு எங்கே படிச்சாரு. காலேஜ்ல இருந்து ஒடி வந்திட்டாரு. அங்கனயும் ஒங்க பேரத்தான் ஒங்க கொழுந்தியா பயன்படுத்துதா. அவோ பெரிய வீட்டுப் பெரியப்பா மாரி பெரிய ஆளா வந்திருவாம். அவோளும் பத்தாங்கிளாசுக்குப் பொறவு காலேஜ் போயிட்டு ஒடி வந்த ஆளுதானங்கா.

வெளங்கிச்சு பே. எய்யா அப்பா கூடக் கடையப் பாத்துக்கிடுதியோ.

எங்க அண்ணாச்சி, போத்தீஸ்ல விதம் விதமா பேண்டும் சட்டையும் அவங்க அம்மாக்காரி எடுத்துக் குடுக்கா. அவாள் மைனரா அலையுதாரு.

அதாம்வே நானும் கூப்பிட்டு விட்டேன்.

நெல்லையப்பா அந்த சேட் பிள்ளை பின்னால அலயுதீயோ. ஒண்ணும் தப்பில்லை. அவ்வளவு அழகா இருந்தா போகத்தான் தோணும். ஆனா அவ எம்.சி.ஏ. படிக்கான்னு தெரியுமாவே. அவனுகளுக்கு ஒண்ணுன்னா ராஜஸ்தான் அரசாங்கம் நம்ம அரசாங்கத்துகு தகவல் தரும். கொன்னுருவானுவ. நீரும் பெரிய படிப்பெல்லாம் படிச்சு அந்தப் பிள்ளைய காப்பாத்தற அளவு சம்பாதிச்சாக் கூட பெரியப்பா பேசி ஏதாவது பண்ணிருவேன். கொஞ்சம் யோசனை பண்ணிப் பாரும்.

ஒரு நேரம் காலையில் டிபன் எவ்வளவு செலவாகும் தெரியுமாவே. மூணு நேரம் சாப்பாடு. மருந்து மாத்திரை சினிமா டிவி சேல துணிமணின்னு செலவு வேற. அதுக்கெல்லாம் வழி இருக்கா. ஒங்க அம்மை வேற அவங்க அண்ணன் மக சிவகாமிதான் எனக்கு மருமகன்னு ஊரு பூராவும் சொல்லிக்கிட்டு அலையுதா? காதல் பண்ணக் கூடாதுன்னு சொல்லல. அவளும் ஒன்னய விரும்பினாத்தானடே காதல்.

நீ வெள்ளையும் சொள்ளையுமா பேண்டும் சர்ட்டும் போட்டா வந்திருவாளாடே. போயி ஏதாவது தொழில் பாரு. இல்ல ஊரில வயக்காடு இருக்குல்லா அதைக் கவனி. எல்லாப் பயலுவளையும் காப்பாத்துத தொழில்ங்கார் வள்ளுவர். அதை விட்டுட்டு இப்படி அலையக் கூடாது சரியாய்யா. அவனுக கோடீஸ்வர்ன்லா அய்யா. அவ முறைப்பையன் எத்தனை கோடி சொத்துக்கு சொந்தக்காரன் தெரியுமா. அவனும் அவளைப் போலவே செகப்புரெட்டா இருப்பாம்ல்லா. ஏம் மேல் ஒமக்கு கோபம் தான் வரும். ஆனா இந்தச் சேட்டைய நிறுத்தலைன்னு வையும் போலீஸ்ல்லாவே வரும்.

நல்ல புள்ளைல்லா வீட்டுல போயி யோசிச்சுப் பாரும் ஒமக்குப் புரியும். ஒங்க அம்மையும் ஒங்க மாமனும் சேந்து ஒண்ணக் கொல்லக் கூட யோசிக்க மாட்டாங்க. அவ ஒம் மொறப் போண்ணு அவளே கடுமையான பிள்ளைல்லாவே, யாரு பின்னாலேயும் அலைஞ்சா கோட்டிக்காரப் பயன்னு சொல்லிரு வானுவள்லா நம்ம ஊருல.

நாம் பாத்துக்கிடுதம் அண்ணாச்சி. ஒங்க கொழுந்தியா போன்ல கூப்பிட்டாலும் கூப்பிடுவா. அவளுக்கும் புரியுதமாரி சொல்லுங்க அண்ணாச்சி.

சரி வே, பார்த்து போய்ட்டு வாங்க.

யத்தான்.

யாரு வத்தக் குழம்புக்காரியா. எங்க அம்மையில்லா. சொல்லுளா.

இனிமே இந்த பய எங்கேயும் வர மாட்டாம். அந்த சேட் கிட்ட உறுதியாச் சொல்லுங்க. என்கிட்ட அவம் சொல்லிட்டாம். பெரியப்பாவெல்லாரும் ஏன் அய்யா அய்யான்னு சொல்லி விழுந்து கும்பிடுதாங்கன்னு இன்னிக்குத்தாம் தெரிஞ்சுகிட்டேன்ங்கான். நல்லாப் புரியற மாரி கோபமே

இல்லாம பெரியப்பா சொன்ன பொறவுதான் நான் எப்படி அசிங்கமா நடந்துக் கிட்டிருக்கேம்ன்னு புரிஞ்சுதும்மான்னு சொல்லிட்டான். ஒங்க மாப்பிள்ளய கடைய ஒழுங்கா நடத்தச் சொல்லுங்க.

நெனச்சேம்லா. சொல்லிட்டே. சொல்லிருதேம்ம்மா. நல்ல இரி.



'ஏய் பூரணலிங்கம் என்னல காலேல'

'ஒண்ணுமில்ல அண்ணாச்சி நம்ம சொரணத்தக்காவ கோயில்ல பாத்தேன் அண்ணாச்சி. அவ ரொம்ப வருத்தப்பட்டா அவ வீட்டுக்காரர் இறந்ததுக்கு நம்ம கிட்டுப்பிள்ள வரல்லேன்னு'

'நெனச்சேம்ல ஏதாவது குண்டுணி பேசலைன்னா ஒனக்கு தூக்கம் வராதுன்னு'

'ஒடனே என்னயத்தான் குத்தம் சொல்லுவியோன்னு தெரியும். ஒடம்பொறந்தவ வீட்டுக்காரம் செத்துப் போயிட்டான்னா இவரு போகல்லேன்னா சரிங்களோ அண்ணாச்சி?'

ஏய் சவத்து மூதி கிட்டுப் பிள்ளையப் பத்தி ஒனக்குத் தெரியும்லாலே. அவம் அப்படி ஆளால, அவம் குடும்பத்தில எல்லொரும் அவனைப் பயன்படுத்திக்கிடுவாங்க. பொறவு

ஆவலாதி தான். இந்த ஊருக்கே தெரியும்ல அவனப்பத்தி. அவ சொன்னாளாம் இவரு கேக்க வந்திட்டாராம். மூடிக்கிட்டுப் போல.

எல அவளுக்கு மூணு கொள்ளி இருக்கானுவள்ளா. ஒரு பயலாவது உருப்படியா இருக்கானுவளா சொல்லுல. பூராவும் குடிகாரப் பயலுவ. கேட்டா அந்த அக்காதாம் சொல்லுவா, அவர மாதிரியே வந்திட்டானுவ தம்பின்னு அவ புருஷன்காரனப் பத்திச் சொல்லுவா. எல கிட்டுப் பிள்ள வாரந்தோறும் ஏதாவது கோயிலுக்குப் போவாம்ல்லால இவளும் அவன் குடும்பத்தோட தொத்திக்கிடுவா தெரியும்லால ஒனக்கு.

ஆமா அண்ணாச்சி அன்னிக்கு நவ திருப்பதிக்குப் போம்போதும் கூடத்தாம் போனா.

அஙங் போயி அவ பெருமாள்ட்ட என்ன வேண்டுவான்னு தெரியுமால. அவ புருஷன் உடனேயே செத்துப் போகணும்ன்னு. அது மட்டுமில்லல இந்த மாசம் உறுதியா செத்திருவாரு. புளியங்குடி ஜோசியன் சொல்லிட்டான்ம்பா. கிட்டுப்பிள்ளை வந்து அழுவாம். இவ தலையெழுத்து இப்படி ஆயிடுச்சே அண்ணாச்சிண்ணு. அவதான கோயில் கோயிலா வேண்டினா. இப்பம் அவரு செத்ததுக்கு வரல்லேன்னா. அசிங்கமா இல்லையா?

எல அவ பெரிய பய பன்னெண்டாம் கிளாசில அஞ்சு தடவ பெயிலா ஆயிட்டான். ஒரு காலேஜிலேயும் சேர்க்க முடியல்ல. கிட்டுப் பிள்ளைதான் நம்ம கிறிஸ்துவக் காலேஜில சேர்த்து விட்டான். ஒரு தடவை பெயிலான பயலுவளய அந்தக் காலேஜ்ல சேக்க மாட்டானுவ. இவனச் சேத்துக் கிட்டானுவன்னா கிட்டுப் பிள்ளைக்காகத்தானே.

ஒரே மாசத்துல அந்தப் பய அந்தக் காலேஜ்ல ஸ்டிரைக் பண்ணிட்டாம். கிட்டுப்பிள்ளை போயி காலேஜ் பிரின்சிபால்

முன்னால தலையத் தொங்கப் போட்டுக்கிட்டு நின்னான். அடுத்த பய இருக்காம்ல்லா. நம்ம கண்ணதாசன் ஒரு சினிமாப் பாட்டுல் எழுதியிருப்பருல்லா! காமுகர் நெஞ்சில் நீதியில்லை அவர்க்கு தாயென்றும் தாரமென்றும் பேதமில்லை என்று. அவம் கூத்து பெருசுல. ஒரு சொந்தக்காரங்க வீட்டிலயும் அவன உள்ள விட மாட்டாங்க.

பொம்பளப்புள்ள இருக்க வீட்டில மட்டும் இல்லல. பொம்பள இருக்க வீடுகளுக்குள்ளய விட மாட்டங்க. கிட்டுப் பிள்ளைட்ட வந்து அவனுக்கு பொண்ணு பாக்கச் சொல்லியிருக்கா. கிட்டுப்பிள்ளை பொம்பளப்புள்ள பாவத்தில் நாம அடிச்சு விழுந்திருக் கூடாதுன்னு ஒண்ணும் பாக்கல. அவளா ஒரு பொண்ணைப் பாத்துக் கட்டி வச்சா. யாரோ ஒரு பைத்தியக்காரன் தன் பொண்ணைக் குடுத்தாம். இந்தப் பய தனிக்குடித்தனத்தில அந்தப்புள்ள முன்னாலேய பக்கத்து வீட்டில் இருக்கற ஒரு ஊனமுற்ற பையன் பொண்டாட்டியக் கூட்டிட்டு வந்து கூத்தடிச்சிருக்காம். அந்தப் புள்ள அவ அப்பன் வீட்டுக்குப் போயிட்டு.

கிட்டுப்பிள்ளை பயலுவல்லாம் எப்படி அவம் வளத்திருக்காம். அப்படி பாத்த உடன கால்ல விழுந்து கும்பிடுவானுவ பெரியப்பா ஆசீர்வாதம் பண்ணுங்கன்னு.

ஆமா அண்ணாச்சி என்னயும் எங்கன பாத்தாலும் மாமாண்ணு கும்பிடுவாங்க அண்ணாச்சி.

கிட்டுப்பிள்ளை மூத்த பயலுக்குக் கல்யாணம் ஆச்சுல்லால..?

ஒங்க தலைமையில தான கல்யாணம். ரெண்டு நாளா எல்லாருக்கும் அவங்க வீட்டில தான சாப்பாடு.

கிட்டுப்பிள்ளை மாதந்தோறும் திருச்செந்தூர் போயிருவாம்ல்லா. அன்னிக்கு இந்தச் சின்னப் பய வந்திருக்காம்

பொம்பளப் புள்ள இருக்க வீட்டுக்குள்ள இந்தப் பயல எப்படி விட முடியும். குடிச்சிட்டு வேற வந்திருக்காம். பணம் கேட்டிருக்காம். அந்தப் பயலும் மரியாதையா அத்தான் ஒங்கா மாமா திருச்செந்தூருக்குப் போயிருக்கா, சாயங்காலம் வந்து வாங்கிக்கோண்ணிருக்காம். இந்தக் குடிகாரப் பய நிலயா நின்னிருக்காம். பக்கத்து வீட்டுப் பலவேசம் போயி, யோவ் யத்தான் பெரியப்பா ஊரில் இல்லைல்லா அவாள் வந்ததுக்கப்புறம் வாங்கண்ணிருக்காம். அவனைப் போயி தேவடியா மகனேண்ணிருக்காம். அந்தப் பயலா பளிச்சின்னு யாரையும் கை நீட்டிருவாம்ல்லா. கையை நீட்டிட்டான். பொறவு அவன் அண்ணன்காரன் வந்து இந்தக் குடிகாரப் பயல கூட்டிடிட்டு போயிருக்காம். இந்தப் பய பணத்தைப் பூராம் அவம் அண்ணங்காரன் தான் ஆட்டையப் போட்டிருக்காம். அவம் இந்தப் பயல ஒடனே சென்னைக்கு அனுப்பி வச்சிருக்காம்.

இடையில் கிட்டுப் பிள்ளை வீட்டுக்காரிக்கு ஒடமம்புக்குக்குச் சரியில்லேன்னு மெட்ராசுக்குக் கூட்டிட்டுப் போயிருந்தாம்லா அப்பம் இந்தப் பய வீட்டுக்கு பக்கத்துல இருந்த ஒரு மிலிட்டரிக்காரன் பிள்ளைய பதினஞ்சு வயசுப்பிள்ளைய கூட்டிட்டு கிட்டுப் பிள்ளை வீட்டுக்குப் போயிட்டாம். அதையும் எப்படியோ கிட்டுப் பிள்ளை சமாளிச்சு அந்தப் பிள்ளையை அவங்க அப்பன்காரன்கிட்ட ஒப்படைச்சிருக்காம்.

இந்தப் பய அதேதான் சாக்குன்னு அங்கேயே ஒரு ஆறு மாசம் டேரா போட்டுட்டான். அங்கனயும் சும்மா இல்ல ஒரு இளநீர் விக்கறவம் பொண்டாட்டிய சினிமாவுக்கு கூட்டிட்டுப் போயிட்டாம்ன்னு எல்லாரும் ஆவலாதி. என்ன பண்ணுவாம் கிட்டுப் பிள்ளை. அவன ஊருக்குப் போய்யான்னு கெஞ்சிக்கூத்தாடி அனுப்பிச்சு வச்சிருக்காம்.

இவ என்ன சொல்லுவா தெரியுமா எல்லார்ட்டயும் ஒரு வாய்ச் சோறு போடாம எம்புள்ளய அனுப்பிச்சிட்டாம்ன்னு. ஆறுமாசம் இந்தப் பய அங்க என்ன பீயையால தின்னாம். இவள்லாம் ஒரு மனுஷின்னு நீரு கேக்க வந்திட்டேரோ. எல அவளுக்கு ஒரே ஒரு பொம்பளைப்பிள்ள . இவங்க மெட்ராஸ்ல இருக்கும்போது அவளுக்கு ஒரு பெரிய காலேஜ்ல கிட்டுப்பிள்ளைதான் சீட் வாங்கிக் கொடுத்தான். நன்றி வேணும்ல நன்றி.

அந்தப் பிள்ளைக்கு ஒரு பெரிய குடும்பத்தில கிட்டுப்பிள்ளத்தான் மாப்பிள்ளை பார்த்துக் கொடுத்தான். பத்து வருசமா வாங்கின சம்பளம் அத்தனையும் அந்தப் பையன் பேங்கிலதான் போட்டு வச்சிருந்தான். அந்தக் கல்யாணத்தையும் கிட்டப்பிள்ளைதான் பொறுப்பா நடத்தினான். கல்யாண வீட்டுலயே கிட்டுப்பிள்ளைய அவமானப்படுத்தினா அவங்க அக்கா, அவள்ளாம் என்ன பொம்பளண்ணு பேசவந்தே. அவ கேட்டாளாம். இவரு கேக்காராம்.

எல அந்தக் குடிகாரப்பயல பலவேசம் அடிச்சாம்லா. அதுக்குப் பிறகு அந்தப் பய மெட்ராஸ் ஊர்ல சொந்தக்காரங்க வீட்டுக்குல்லாம் போயிருக்காம். எவம் வாசப்படியிலே ஏத்துவாம். கையில குடிக்கப் பணமுமில்லே. சோத்துக்குக் கூட யார் வீட்டுக்குள்ளேயும் போக முடியல்ல. கடைசியிலே விஷத்தைக் குடிச்சுச் செத்திட்டான். சொர்ணத்தக்காவோட முட்டாத்தனம்தான் அவனக் கொன்னுது.

சொர்ணத்தக்கா அவ பாணியிலேயே கிட்டுப் பிள்ளை மகன் அடிச்சதிலத்தான் அவன் செத்தான் செத்தான்னு செத்த வீட்டுக்குள்ள எல்லாத்திட்டயும் சொல்லி அழுதிருக்கா. எல்லாரும் கிட்டுப்பிள்ளைட்ட வந்து சொல்லிருக்காங்க. அதுக்குப் பின்னாலே அவ வீட்டு வாசப்படிக்கு எப்படி

போவான். அவம் பிள்ளைகள எப்படி வளத்திருக்காம்ன்னு உனக்குத் தெரியும்லால. இத்தனை அயோக்கியப் பயலுவள சொர்ணத்தக்கா தெய்வக் குழந்தைகள்ன்னு வர்ணிப்பா. அவள்ளாம் ஒரு பொம்பிளண்ணு பேச வந்திட்டியோ.

எல கிட்டுப்பிள்ளை கூடவே கோயில் கோயிலப் போயி அவங்க குடும்பம் ஒரு நல்ல காரியத்திற்காக கோயிலுக்குப் போம்போதும் தன் புருஷனைக் கொல்லணும்ன்னு கடவுள் எல்லாரையும் கூலிப்படையாக வேண்டுதல் வச்சவ என்ன யோக்கியதையில அவன் வரல்லேங்கா.

மன்னிச்சிடுங்க அண்ணாச்சி. தெரியாமக் கேட்டுப் புட்டேம்.

எதையுமே தெரியாமப் பேசாதீங்கடாண்ணு எத்தனை தடவை உங்ககிட்டச் சொல்லி அழுதாலும் இப்படித்தானல பேசிக்கிட்டு அலையுதீய.

எய்யா எந்திரிங்க ஒங்களத்தானே. எந்திரிங்க. யாரு வந்திருக்கா பாருங்க.

ஏட்டி எத்தன தடவ சொல்லிருக்கேம். தூங்குதது யார்ன்னாலும் எழுப்பாதேன்னு. கேட்டுத் தொலையுதியா.

அய்யா அத ஒங்களுக்குச் சொல்லிக் குடுத்த அத்தாம்ல்லா வந்திருக்காக. ஒங்க பெரிய வீட்டு அண்ணாச்சி.

ஏட்டி அத்தானக் குத்திக் காட்டுதீயோ.

போச்சு. இதுக்குள்ள இப்படி ஒரு சூது இருக்குன்னு எனக்கெங்க தெரியுது. ஒங்க தம்பி எழுந்திரிக்கல. அதுக்குத்தான் சொன்னோம்.

அண்ணாச்சி இது என்ன கூத்து. சொல்லி விட்டா நாம் வரப் போறேம். நீங்க இந்த முடுக்குக்குள்ள இத்தன வெடியக் காலேல.

எல மூஞ்சியக் கழுவிட்டு பல்ல கில்லத் தேச்சிட்டு வால. ரெண்டு பேரும் காபி குடிப்போம். களக்காட்டுக்காரி கையால காப்பி சாப்பிட்டு எத்தன நாளாச்சு அதாம்ல வந்தேம்.

ஒங்களுக்கு தம்பிட்ட ஏதோ அவசரமா சொல்லணும்ன்னு. வந்திட்டு களக்காட்டுக்காரிய ஏம் இழுக்கியோ.

ஏளா நெசமாத்தாம் சொல்லுதேம். எங்கப்பா சொல்லுவாங்க டீ குடிக்கணும்ன்னா சாயபு வீட்டில குடி. காப்பின்னா பிராம்மணன் வீட்டில குடி.

அண்ணாச்சி அப்பம் இவளப் பிரம்மணத்திங்கேளோ.

எல அவ காப்பியக் குடிச்ச பொறவு அப்பா சொன்னதத்தான் நெனப்பேம். பிராம்மணக் குடியிலய வளந்தவதான.

ஆமா அங்கன வளந்தோம். எங்கன வந்து வாக்கப்பட்டிருக்கோம்.

எல ஒனக்கென்ன கொற சொல்லும்மா.

சும்மா வெளையாட்டுக்குல்லா சொன்னேம் அத்தான்னு.

யம்மா இந்தப் பய ரொம்ப நல்லவம்மா. அவனுக்குன்னு ஒரு கட்டுக் கழுத்திய தங்கத்த எங்க அப்பம் நெல்லையப்பனும் காந்திமதியும் கொண்டு தந்தாங்களேன்னுல்லா. அத்தாம் ஊருபூராம் சொல்லிக்கிட்டுருக்கேன்.

என்னத்தான் அத்தான்னு வெளையாட்டுப் பேசினா. சரி காப்பியக் குடிங்க.

எல வாசனையப் பாத்தியா.

அண்ணாச்சி ஒரேயடியா கொழுந்தியாள ஏத்தி விட்டுட்டுப் போயிராதீய தம்பி வாழ வேண்டியிருக்குல்லா.

எல அவ தங்கம்ல்லாடா.

என்ன அண்ணாச்சி.

எல இந்தக் கிட்டுப் பிள்ளை வெஷயம்ல்லாம் தெரியும்லா. அந்தக் குடும்பத்தில பொறந்து எல்லாருக்கும் எல்லாம் செஞ்சிட்டு நல்லதையே பாக்காம வாழ்ந்திட்டுருக்கானே.

ஆமண்ணாச்சி. அவ அக்கா மகளுக்கு கலியாணம்ன்னு சொன்னாங்களே அண்ணாச்சி. அதுக்குக் கூட அவர அவ அக்காக்காரி கூப்பிடல.

தெரியும் அண்ணாச்சி. அந்தப் புள்ளைக்கு கணக்கு வராதுன்னு நம்ம சொக்கு பிள்ள சார்வாள்ட்ட அவளப் படிக்க வெக்கணும்ன்னு அவாள் அக்காளும் அத்தானும் அவோட்ட வந்து ஒரு வார்த்தைதான் சொன்னாங்க. என்னயக் கூட்டிக்கிட்டுத்தாம் சொக்க பிள்ளை சார் வீட்டுக்கு நாங்க ரெண்டு பேரும் போனோம் அண்ணாச்சி.

எவ்வளவு பெரிய குடும்பம்ன்னாலும் அங்கன போயித்தாம் படிக்கணும். கிட்டுப் பிள்ளையப் பார்த்தவுடனே.. வாடா பொழைக்கத் தெரியாதவனே, என்னான்னு சார்வாள் கேட்ட ஒடன. எங்க அக்கா பொண்ணு நல்லாத்தாம் படிக்கா சார் அவளுக்கு நீங்க கணக்கு சொல்லிக் கொடுக்கணும்ன்னு கிட்டு அண்ணாச்சி சொன்ன மறு கணமே. ஒம் வீட்டுக்கு வந்தே சொல்லிக் குடுக்கேம்ன்னாரு. எனக்கு ஆச்சரியமா இருந்தது அவாள் எந்தக் கொம்பன் வீட்டுக்கும் போக மாட்டாவோ. அவாள் வீட்டுக்கே வாரேம்ன்னு சொன்ன ஒடனே அவாள் கால்ல விழுந்து கிட்டுப் பிள்ளை அண்ணாச்சி கும்பிட்டாக. நானுந்தாம்.

நாளைக்கு அந்தப் புள்ளைக்கு கலியாணம். திருநவெலியிலய நடக்குதாம். இவனக் கூப்பிடல. இவம்தாம் அதையும் பொறுத்துக் கிடுவான்லா.

பொறவு... கூடவே வச்சு வளத்தீய. ஒங்கட்ட தமிழ் படிச்சவருல்லா அண்ணாச்சி.

காந்திமதி என்ன பண்ணீருக்கா பாத்தையா. எங்க அம்மை. இந்தப் பயலுக்கும் இவம் பொண்டாட்டிக்கும் அந்த ஆழ்வார்குறிச்சிக்காரி இருக்காள்ளால.. அவளுக்கும் இந்தப் பொண்ணு மேல உயிரு. அவங்க இப்படி நடக்கும் போது சங்கடப்பட்டுகிட்டுக் கெடந்தாங்க.

காந்திமதியம்மே திருவிளையாட்டப் பாத்தியால நம்ம நகைக்கடை பாயி இருக்காருல்லா. அவர்கிட்டத்தாம் வெள்ளி விளக்கு ஆர்டர் குடுத்திருக்காங்க. அவம் வழக்கம் போல இன்னிக்கு காலேல அதக் கொண்டு கிட்டுப் பிள்ளை வீட்டில கொடுத்து கலியாண வீட்டுக்குப் போவீங்கள்ளா கொடுத்திருங்க அத்தான்னு சொல்லிட்டுப் போயிட்டாம். இவனும் இவம் பொண்டாட்டிக்கும் சந்தோஷம் தாங்கல. வீட்டில அவங்க அப்பா அம்மா படத்து முன்னால வெச்சு ஒரு பெரிய பூஜை நடத்தித்தான் குடுத்து விடணும்ங்காம். இந்தக் காரியத்த சரியாச் செய்ய ஒன்னய விட்டா எனக்கு யாருல இருக்காம். நீ ராத்திரிகொண்டு போயி குடத்திட்டு வந்திரும் என்னய்யா.

கொண்டு போய்க் குடுன்னா கொடுக்கப் போறேம்.

அங்கன அவங்க என்ன கேட்டாலும் ஒரு வார்த்தை கெம்பிரக் கூடாது. அதுக்குத்தாம் ஒன்னயத் தேடி வந்தது. யம்மா வரட்டுமா. கொஞ்சம் புளிக் காய்ச்ச வச்சுக் குடுத்து விடும்மா.

சாயங்காலமே வந்து அக்காகிட்ட குடுத்திருதேம்.

ஏட்டி நாம் கேட்டா அக்காகிட்ட குடுத்திருதேம்ங்க.

என்னைக்கு ஒங்க கிட்ட நாங்க வந்திருக்கம். எப்பவும் ஆட்கள் சுத்தி ஒக்காந்திருந்தா எந்தப் பொம்பள ஒங்கிட்ட வர. பொறவு அக்கா கிட்டத்தான குடுக்க முடியும்.

வாரும் வே பசுங்கிளியா பிள்ளை. அத்தானை இப்பம்தான் நெனவு வந்திச்சோ.

ஆரம்பிச்சிட்டேளா. அய்யா நான் கடை கண்ணியோட படாதபாடு பட்டுக்கிட்டிருக்கேன். போதாக்குறைக்கு ஒங்க தங்கச்சி படுத்துத பாட்டையும் பொறுத்துக் கிட்டு ஒருத்தன் வாழுறதே பெரிய காரியம்ண்ணு நெனைக்கவே மாட்டுக்கேளே.

வே நாங்க பைத்தியக்காரத்தனமா எங்க தங்கச்சிய கட்டிக் கொடுத்தத இப்படிச் சொல்லிக் காட்டுதீரோ. அவ இருக்கப் போய்தாம் நீரு மணந்துக்கிட்டு இருக்கீரு, மறந்திராதியும்.

சரிய்யா வாயத் தொறக்க விடமாட்டேளே.

யத்தான் நான் நேத்து ராத்திரியே வந்திட்டேன். இப்பம் போய் அவாளத் தொந்தரவு பண்ணாதேன்னு ஒங்க மாமனார் சொன்னதுனாலதான் இப்ப வந்தேன். ஆமா இந்த ஆவுடையப்பம் பொண்டாட்டி யாரோடயோ ஓடிப்

போயிட்டாளாமே. அத ஊர்க்காரனுவ சொல்லுதானுவ, அவோ ஒங்க பெரிய வீட்டு அத்தான், அந்தப் பிள்ளைய எவனும் கொற சொல்லாதீங்லண்ணு உத்தரவு போடுதாவண்ணு சொல்லுதானுவளே நெசந்தானா.

நெனச்சேம். தென்காசிக்கு தகவல் வந்து இத வெசாரிக்கத்தாம் நீரு வந்திருக்கேரு. இதில அத்தானப் பாக்க வந்ததா ஒரு நாடகம். எய்யா அது சின்னப் புள்ள, நல்லா பாக்க அம்சமா வேற இருக்கு. அதப் போயி அவ அம்மை அந்த ஆவுடையப்பப் பயலுக்கு, நாப்பது வயசான பயலுக்குக் கட்டிக் கொடுத்தா எப்படிவே சரி? சொல்லும். பளிச்சினு எல்லாப் பயலுவளையும் போல நீங்க பேசலாமா. தென்காசியில் எத்தனை பெரிய தமிழ் அறிஞர்கள்லாம் வந்து திருக்குறள் கழகத்தில் பேசுதாங்க. அதை நல்லாக் கேட்டிருந்தா பொம்பளப்புள்ளயக் கொற சொல்றத விசாரிக்க வர மாட்டீய.

அவ அம்மையப் போல மகன்னு ஊர்க்காரனுவ சொல்லுதானுவள்ளா. அதான் கேக்கலாம் ன்னு வந்தேன். மக்களுக்கு ஆயிரம் பிரச்சினை எல்லாம் இருக்கு அதையெல்லாம் விட்டுப் போட்டு இதக் கேக்க வந்தேளாக்கும். என்ன அவ அம்மே பண்ணிட்டா. அவளும் அந்தக் கிராமத்திலேயே அழகுல்லா. ஒடம்பு வேற நல்லாச் சாப்பிட்டு சாப்பிட்டு வளந்திருந்துது. நெய்யும் தயிருமால்லா அவ அம்மே அவள வளத்தா.

அவளைக் கொண்டு சொந்தம்ண்ணு ஒரு டிரைவருக்குக் கட்டி வச்சா. அந்தப் பய காரையே சரியா ஒட்ட மாட்டான்னு திருநவேலி பூராம் தெரியும். சரி இரண்டு பொட்டபுள்ளகளயும் பெத்தா. இவம் ஒழைக்கதில்ல. எப்பம் பாரு எவங்கிட்டயாவது கடன் வாங்கியே பொழப்ப ஓட்டப் பாத்தான். அப்பந்தாம் அவ தூரத்து சொந்தக்காரன் தாசில்தாரா வந்தான். அவ வீட்டுக்குக் கிட்டய குடியும் வந்தான். இவ அவனுக்குப் பொங்கிக்

குடுத்தாவது புள்ளைகளக் காப்பாத்தலாம்ன்னு அவனுக்கு பொங்கிக் கொடுக்க ஆரம்பிச்சா. இவ புருஷங்காரப் பய அவங்கிட்டயும் பிச்சை எடுக்க ஆரம்பிசான். அந்தப் பய இவள ரொம்ப அன்பா வச்சுக்கிட்டான். வேணும்ன்னாவே அந்தப் புள்ள பண்ணுச்சி. சூழ்நிலைவே மாப்பிள்ளை. பொசுக்குண்ணு பேசிடப்பிடாது பொம்பளப் புள்ளகள புரியுதா!



ஹலோ யாரு,

எல பிச்சம்மா. நல்லா இருக்கியால. ஊருல்லாம் புடிச்சிக்கிட்டா. அந்த ஊருக்கென்னா. அவரு மணிகண்டன் நாயர் எப்படி இருக்காரு. நல்ல பையமல்லா. சந்தோஷமா இரில. மலையாள பூமியே அழகுதானல. ஒங்க அப்பனா, ஊரு பூராவும் அண்ணாச்சி இப்படிப் பண்ணிப்புட்டாகளேன்னு ஒரே புலம்பல்தானாம். நேற்று ஒங்க ஹெட்மாஸ்டர் மாமா வந்திருந்தாகள்ளா அவுக சொன்னாக. அவுக கிட்டயும் போயி ஆவலாதி.

அவுக கேட்டிருக்காக. என்னவே தப்பு பண்ணிட்டாக பெரிய வீட்டு அண்ணாச்சி. அவாளுக்குத் தப்பு எப்படிய்யா தெரியும். நீரு மனுசனா, ஒரு அப்பனா நடந்துக்கிடல. அவாளும் பொறுத்துப் பொறுத்துப் பாத்தா. பொம்பளப்புள்ளயும் அவாள்ட்ட போயி நின்னிருக்கு. அவ சொன்னத ஏத்துக்கிடுதத தவிர வேற வழியில்லவே. ஒம்ம வீட்டுக்காரி கிட்டயும்

சொல்லிருக்காக. அவதாம் அப்படியே பண்ணிருங்க அண்ணாச்சி. இல்லேண்ண எம்புள்ள வாழ வேற வழி கிடையாதுன்னு சொல்லி அழுதிருக்கா. சரியாத்தாம் அவுக செஞ்சிருக்காங்கன்னு சொல்லிருக்காக.

நானால, வருவேம்ல்லா. எங்க அம்மேல்லா நீ.

எப்பமும் வருவேம். அவாள்ட்ட, ஒங்க மாமனார் மாமியார்ட்ட, எல்லார்ட்டயும் சொல்லு. அந்த ஊருல தேங்காய் விசேசம்ல்லா. சொதி வச்சிரு என்னா.

நான் ஒண்ணும் கடவுள் இல்ல. மனுசனா இருந்தாப் போதும். ஒங்கப்பனுக்கு அறிவில்லையே. எங்க அம்மை சொல்லுவா, 'தான்தின்னி பிள்ளை வளரா தவிடு தின்னி கோழி வளரா'ம்பா. அறுபது வயசிலேயும் தான் திங்கணும், வாழணும்ன்னு இருக்கானே. இப்படியும் பொறந்திடுதானுவளே என்னம்மா செய்ய.

வடமொழியில ஒரு செய்தி ஜெயகாந்தன் அண்ணாச்சி, 'பிரம்மோபதேசம்' ங்கிற கதையில் எழுதி இருப்பாக. அதாவது ஒரு தகப்பன் பதினாறு வயசுக்குள்ளே தன் பெண்ணுக்கு திருமணம் செய்து வைக்கலேன்னா அந்தப் பொண்ணு அவ மணாளனை அவளே தேர்ந்துக் கிடலாம்ன்னு.

மொழி என்னம்மா மொழி. மனுசனுக எல்லாரும் உணர்ந்திருக்கானுவ. ஒங்க அப்பன், அவங்க அப்பனை மாரியே பொறந்திட்டாம். சரி நீ ஆபீஸ்க்கு போக வேண்டாமா. பெரியப்பன் கிட்டயே பேசிக்கிட்டிருந்தேண்ணா.

ஒங்கப்பன நாம் பாத்துக்கிடுதேம். இதுக்கப்புரமும் அப்பனைக் காப்பாத்தணும்ன்னு நெனக்கீயே. தங்கம்ல்லா எங்கம்மை. நல்லா இரு. கோயில் நெறய இருக்கு கேரளாவில. வீட்டுக்காரரோட போயிட்டு வா. பெரியப்பா இன்னும் கொஞ்சம்

நா கெடக்கணும்ன்னு வேண்டிக்கிடுவீயா. வெச்சிருதேம்மா. மாப்பிள்ளகிட்ட கேட்டேம்னு சொல்லு.

நல்லாஇரி.

•

யாருல வாசல்ல.

அண்ணாச்சி நாம்தாம் பரமசிவம்.

பாம்பு கழுத்தில இருக்கா. இல்ல கழத்தி வச்சிட்டு வந்திருக்கியா.

இலலேண்ணாச்சி. நான் எலக்ட்ரீஷியன் பரமசிவம்.

வாவே கரண்ட் பிள்ளை. என்ன சேதி. சொல்லும், வெபரம் கூடுன ஆளுல்லா நீரு. சொல்லும்.

புன்னை வனம் அண்ணன் புலப்பம் தாங்க முடியல்ல அண்ணாச்சி. மின்னடிப் படித்துறையில் குளிக்க வருதவம்ட்ட பூராம் சொல்லி சொல்லி அழுதாரு. கோயில்லா ஊஞ்சல் மண்டபத்தில் ஒக்காந்துக்கிட்டு, காந்திமதி அம்மேட்ட வேற புலம்புதல்.

என்ன? என்னய கொல்லணும்ன்னு வேண்டுதானால.

இல்ல. பெரிய ஆளு எம்புள்ளய மலையாளத்துக்காரன் கையில புடிச்சுக் குத்துட்டாவளேன்னு புலப்பம்.

எல தெரியாத மாரியே பேசுதிய. நீ நல்லகண்ணுப்பிள்ளை மகம்ங்கத காம்பிக்கியோ. ஒனக்கு ஒண்ணும் தெரியாதோ. முட்டாப் பயல. எல அந்தப் புள்ளைக்கு எத்தனை மாப்பிள்ளைத் தரம் வந்துது. ஒண்ணையாவது திகைய விட்டானாலே. அந்தப் பிள்ளை தாய்மாமன் அதைப் படிக்க முடிஞ்சவுடனே, 22 வயசில வேலை கெடச்சிட்டு. நல்ல சம்பளம் வாங்குதா. பாக்கவும் லெட்சணமா இருக்கு. அதுக்கு ஒரு கல்யாணம் செய்து வைக்காம, அவ ஒழைப்பில ஒக்காந்து சாப்பிடுதுதுக்காக ஏற்பாடு செய்தானே. இவம்ல்லாம் ஒரு தகப்பனால.

ஒரு நா தீடிர்ன்னு வந்து நிக்கு. பதறிட்டேம். என்னல யம்மாண்ணேன். பெரியப்பா. எனக்கு வயசு 32 ஆயிட்டுப்பா. எங்க ஆபிசில ஒரு மலையாளத்துக்காரர் எனக்கு மேலதிகாரியா இருக்கார். அவரும் தன் தங்கச்சிகளுக்கெல்லாம் கலியாணம் ஆகணும்ன்னு காத்திருந்திருக்காரு. 35 வயசாச்சி. நாயர். அவங்களை கேரளாவில் பிள்ளைன்னு தாம் சொல்லுவாங்களாம். நான் என்ன செய்யட்டும். அதாம் இங்கன ஒடி வந்தேம்.

பண்ணிர வேண்டிரது தானே. ஒங்கப்பங்கிட்ட சொன்னா ஈசியா மலையாளத்துக் காரனுக்கு எப்படிக் குடுப்போம், நம்ம சாதி என்ன நம்ம சனக் கூட்டம் என்ன பழமையெல்லாம் பேசி இத நிறுத்தப் பாப்பாம். ஒங்க அம்மே என்ன சொல்லுதான்னு கேட்டுக்கிட்டியால.

அம்மா ஆரு கிட்டயும் சொல்லாத. நாம் வரமுடியாது பெரிய வீட்டுப் பெரியப்பாட்டப் போயிச் சொல்லு அவுக வழி காட்டுவாகன்னா. அதாம் வந்தேம்.

எல அவங்க ஊருலயே வெச்சிக்குவோம்ன்னு சொல்லிரு. அவரு பேரென்ன.

மணிகண்டன் நாயர் பெரியப்பா.

நான் அவர்ட்ட பேசலாமா.

என்ன பெரியப்பா. நானே சொல்லிருக்கேன் எங்க ஊரில நியாயம் சாகாம இருக்கத எங்க பெரியப்பாணாலதாம்ன்னு.

பொறவு என்ன விடு. நாம் பேசிக்கிடுதேன்னு சொன்னேன். பேசினேன். குருவாயூர்ல கல்யாணம். அவங்க குடும்பத்துக்காரங்க எப்படி ஆட்கள் தெரியுமால. காந்திமதி தன் மகள சரியான இடத்துக்குத்தான் அனுப்பி வச்சிருக்கா. புரியுதால. மூடிக்கிட்டுப் போயி அவங்கிட்ட சொல்லு.



என்ன விஸ்வநாதன் வாங்க வாங்க காலேல, என்ன சேதி சொல்லுங்க.

இல்ல நம்ம அம்பிக்கு ஒரு கல்யாணம் பண்ணலாம்ன்னு ஒரு யோசனை. அதாம் அக்கா போயி பெரிய ஆத்தில் அண்ணாச்சிட்ட கேட்டிட்டு வாண்ணா. அதாம் வந்தேன்.

கட்டையனுக்கா! அவன விடக் கட்டையா பிராம்மணப் பிள்ள இருக்கா. இந்தக் குடிகார மட்டைக்கு யார் பொண்ணு குடுப்பாங்க. ஒரு பொண்ணு பாவத்தில் நாம் விழணுமா? மாமிட்ட கேட்டுட்டு வாங்களேன்.

நானும் ரொம்ப எடுத்துச் சொன்னேன். அக்கா கேக்க மாட்டுக்கா. சின்னப் பயலுக்கு இவன் இருக்கும்போது கல்யாணம் பண்ணியதே அவளுக்குச் சங்கடம்.

அது சரி அவங்களுக்கு இவந்தானே மூத்த கொள்ளி, ஒரு அம்மாவா அவங்க ஆசை சரிதாம். பொண்ணு யாரு தருவாங்க.

இல்லை வடக்க இருந்து ஒரு பிராமணர் வந்தார். அவர் பொண்ணு டீச்சர் ட்ரெயினிங் படிச்சு அரசு பள்ளிக் கூடத்தில வேல பாக்கா. தரேம்ங்கார்.

எல்லா உண்மையையும் சொன்னீங்களா.

ஆமாம் சொல்லிப்புட்டேன் எல்லாத்தையும். எம்மேல அக்காவுக்கு கோபம் தான். ஏற்கனவையே எம்பொண்ணைக் குடுக்கலியேன்னு வேற கோபம். அவர்ட்ட வேற சொல்லிட்டனா... கடுங்கோபம்.

என்ன கோபம், சரியாத் தான சொல்லிருக்கீரு அம்பி நீரு. அப்புறம் படிச்சு என்னத்துக்கு.

அது சரி அந்த டீச்சர் பொண்ணுகிட்ட சொன்னீரா.

இல்ல. அவங்க அப்பா சொல்றார். அவர் கிழிச்ச கோட்டத் தாண்டாதாம் அவர் பிள்ள.

யோ அவம் ஏதும் கிறுக்கனா. அம்பி நீரு அந்தப் பிள்ளை கிட்டச் சொல்லி அது சம்மதமிருக்கான்னு கேட்டுக்கிடும். இந்தப் பாவத்தில் நான் அடிச்சு விழத் தயாரில்ல. அது எத்தனை பெரிய பாவம்ன்னு ஒமக்குத் தெரியலயா.

என்ன என்ன பண்ணச் சொல்றேள். அவளுக்கு அவ பெத்தமகன் மூத்த மகன்னுதான் ஒரே ஆசை.

சரி சரி இதில் என்னயச் சம்பந்தப்படுத்த வேண்டாம்ன்னு அக்கா கிட்டச் சொல்லிருங்க. அந்தப்பொண்ணு தலையெழுத்த நம்மால திருத்த முடியாது போல. ஒங்க அக்காவும் ஒரு பொண்ணுதான் அய்யரே. அவங்களுக்கு இது கூடத் தெரியாதா. போங்க போயிச் சொல்லிருங்க.

•

அய்யா கட்ட அம்பியோட அம்மா மாமி வந்திருக்காங்க.

இரி வே வாரேம்.

வாங்க மாமி. சௌக்கியம்தானே. என்ன விசேடம்.

இல்லை.. ஒங்க செல்ல அம்பிக்கு கல்யாண ஏற்பாடு செஞ்சிட்டிருக்கேம். தம்பி வந்து ஒங்களப் பாத்தானாம். நீங்க ஒங்க அக்காக்குக் கூட இது சரியில்லேண்ணு படலையான்னு கேட்டேளாம். பெரிய அய்யரப் பத்தி ஒங்களுக்குத் தெரியாததா. அவரோடயே நான் குப்ப கொட்டலையா.

அதனாலதாம் சொல்லுதேம் மாமி. நீங்க பட்ட அதே தும்பத்த இன்னொரு பொண்ணு படாமத் தடுக்கறதுதான் ஒங்க கடம.

நீங்க சொன்னா அவந்தாம் கேப்பானே அய்யா.

ய்ம்மா.. குடி ஒண்ண அவனால் விட முடியலயே. அரிசி கிடைக்கோ இல்லையோ இது ஒடன கெடைக்கேம்மா. அரசாங்கமே சூடு சொரணையில்லாம் விக்கேம்மா.

குடி ஒண்ணுதாம் கேடு.

இவம் மட்டுமில்ல குடிக்கிறவம்ல பெரும்பான்மையா நல்லவனுகதாம் மாட்டிட்டு இருக்கானுவ என்ன செய்ய. ஒண்ணு மட்டும் சொல்லிப்புடுதேம் மாமி, என்னை விட்டிரணும், நான் இதில சம்பந்தப்பட மாட்டேன். நானும் ஏம் வீட்டுக்காரியும் அந்தப் பயலுக்கு சோறு போட்டுக் கெடுத்திட்டோம். அந்தப் பாவத்துக்கு எங்கள நீங்க பொறுத்துக்கிடணும், வேற என்னத்தா சொல்ல. ஒங்க தம்பி அய்யருகிட்டய சொல்லி அனுப்பிச்சனே, அவரு சொல்லல்லியா.

சொன்னான். ஓங்க கட்டயனாச்சே. ஒங்ககிட்ட சொன்னா வருவீங்கண்ணு எதிர்பார்த்தேம். ஒங்க ஆசிர்வாதம் அவனுக்கு எப்பவும் இருக்கணும்.

சரி சரி மாமி. விதிப்படி நடக்கட்டும். காந்திமதி என்ன நெனைக்காண்ணு யாருக்குத் தெரியும். இது ஒங்க ஆம், எப்பவேண்ணாலும் நீங்களோ தம்பி அய்யரோ இங்க வரலாம்.

•

அண்ணாச்சி கதயக் கேட்டேளா.

என்னல..போன்ல மெதுவாப் பேசுன்னு எத்தன தடவ சொல்லுதது. என்ன கத சொல்லும்.

நம்ம கட்டப்பய இருக்காம்லலா

எல நம்ம அம்பியையால சொல்லுத.

அவங்க அம்மா அவனுக்கு ஒரு பொண்ணை பேசி முடிக்க எல்லா ஏற்பாடும் செஞ்சிருக்கா. எனக்கு அதுல்லாம் தெரியும்ல. எங்கிட்ட வந்து அவங்க அம்மா மன்றாடினா. நாம் அதிலேல்லாம் சம்பந்தப்பட மாட்டேம்ன்னிட்டேன். இப்ப நீ என்னத்த சொல்ல வந்த அதைச் சொல்லு.

அண்ணாச்சி இந்தப்பய அந்தப் பொண்ணய பாத்து, யம்மா நான் ஒரு மோசமான குடிகாரம். நீ நல்லா ஒரு படிச்ச பையனா பாத்து கல்யாணம் பண்ணிக்க. என்னால ஒரு ஆம்பளையாவும் இருக்க முடியாதுன்னு சொல்லிட்டு வந்திட்டானாம். நீ சம்மதிச்சாலும் நாம் சம்மதிக்க மாட்டேன்’னிட்டு அவங்க அம்மைக்காரிட்ட சொல்லிருக்காம். ஒனக்கு கொள்ளி போட மூத்த கொள்ளி வேணுமா வேண்டாமா சொல்லுன்னு கேட்டிருக்காம். இந்த ஓடம்ப வளத்தது அண்ணாச்சி. கொற நாளுக்கும் அவங்க சோறு போட்டு துணிமணி எடுத்துக் கொடுத்துக் காப்பாத்திருவாங்க.

நீ ஏதாவது வம்பு பண்ணினேன்னா. ஒனக்குக் கொள்ளி போட நாம் இருக்க மாட்டேன்னிருக்காம். எத்தனப் பெரிய மனுசனோட இருக்கேம். என்னய அசிங்கப்படுத்தப் பாக்காதேன்னிருக்காம் கல்யாணம் நின்னுடுத்து அண்ணாச்சி.

குடிகாரப்பயன்னு தானல நாம எல்லாம் அந்தப் பயல நெனச்சுக் கிட்டிருந்தோம். அவனும் மனுசம்ன்னு நிருபிச்சிட்டானே.

நம்ம வீட்டுச் சோறுல்லா அவம் ஒடம்பு பூராவும் ரெத்தமா ஒடுது அதாம்ண்ணாச்சி காரணம்.

சரி பாவம்.. ஒரு பொம்பளப்புள்ள பொழச்சுது. எங்கம்மை காந்திமதி இருக்காடா.

•

ஏல அம்பி என்னல என்னையவே அசர வச்சிட்டியே.

இல்ல அண்ணாச்சி. நாம் ஒரு குடிகாரப் பயன்னு என்னயத் தள்ளி வெக்காம இந்த அரண்மனைக்குள்ள வர விட்டு, சோறும் தண்ணியும் மட்டுமில்லயே அண்ணாச்சி துணிமணியும் தந்து என்னய ஒரு மனுசனா நடத்தினேளே. நீங்க சொல்லுவேள்ளா அண்ணாச்சி. எனக்கு தமிழ் வரக் காரணம் எங்க அப்பா வர்ற தமிழறிஞர்கள்ட்டலல்லாம் பேசரதக் கேட்டு கேட்டு வந்த கேள்வி ஞானம்ன்னு. அப்படித்தாம் அண்ணாச்சி நீங்க ஒவ்வொருத்தருக்கும் அவங்க அவங்க சூழ்நிலயப் பாத்து வழிகாட்டும் போது, பத்துவருஷமாக் கேட்டுக்கிட்டுக் கிடக்கேனே. அதாம் காரணம் அண்ணாச்சி.

ஏல இம்புட்டு அறிவா இருக்கே. இந்தக் குடிப்பழக்கம் எப்படி வந்ததுன்னு தெரியல. இத விட்டுத் தொலைச்சாத்தான எனக்கு மனசு சந்தோஷமா இருக்கும். இது எப்படில்ல வந்தது.

எல்லாம் ஒங்க பெரிய அய்யந்தான் காரணம் அண்ணாச்சி. ஒரு நா குடிச்சிப் போட்டு வந்து சோறு போட்டுக் கிட்டிருக்க எங்க அம்மாவ அவரு அசிங்கப்படுத்தினதப் பாத்த கோபத்திலதாம் அண்ணாச்சி. காலயில பன்னீர்ப் பய இருந்தாம்ல்லா. அவம்கிட்ட நானும் குடிக்கணும் எங்க அப்பனை தூக்கிப் போட்டு மிதிக்கணும்ன்னுதாம் குடிச்சேன்.

இங்கன வந்திருந்தா புத்தி வந்திருக்கும். எங்க அப்பனால வந்ததுதாம் அண்ணாச்சி. இது பொறவு அந்தக் குடிகாரப் பயலுவ என்னய விடாம குடிக்க வச்சிட்டானுவ. ஹோட்டல்ல வாங்குத சம்பளத்த எங்க அவரு அம்மாகிட்ட குடுத்தாரு. எங்க அம்மா நாலு வீட்டில பத்து பாத்திரம் தேச்சாங்க சமயல் பண்ணினாங்க. எங்களக் காப்பாத்தினாங்க. தம்பி ஒழுங்கா படிச்சாம் அரசாங்க வேலைக்குப் போயிட்டாம்.. என்னய, எங்க அம்மாவ துன்பப் படுத்துன எங்கப்பன் குடிக்க வச்சிட்டாம் அண்ணாச்சி. நீங்க தான அண்ணாச்சி சொல்லுவேங்க.

ஊழிற் பெருவலி யா உள மற்றொன்று சூழினும்

தாஅம் முந்துறும்ன்னு..

போடு! குறள்லாம் சொல்லுதியேல. நல்லாரு 06

அண்ணாச்சி சம்முகம் வந்திருக்காரு.

என்னல.. வந்திருக்காரு.. போயிருக்காரு. வரச் சொல்ல வேண்டியது தான.

ஒருநேரம் போல ஒரு நேரம் இருக்க மாட்டியள்ளா அண்ணாச்சி. அதாம் கேட்டுக்கிட்டு கூப்பிடுவோம்னு பாத்தேம்.

என்ன சம்முவம் நல்லா இருக்கியா வே.

தொழில்லாம் எப்படி இருக்கு. இன்னும் சைக்கிளச் சவட்டிக்கிட்டுத்தான் இருக்கேரா.

ஒண்ணும் வெளங்க மாட்டுக்குல்லா அண்ணாச்சி. சவத்த மிதிச்சு மிதிச்சு அலுத்துப் போச்சு. என்னத்தையோ வயித்துப் பாட்டுக்கு ஒடுது.

அம்மைல்லாம் நல்லா இருக்காளா.

அவளுக்கு என்ன அண்ணாச்சி. அவளும் ரெண்டு வீடல பத்துப் பாத்திரம் தேய்க்கா.

ஒரு கல்யாணத்தைப் பண்ணிர வேண்டியது தானவே.

அது ஒரு எழவுதாம் நடக்கணும். அம்மையும் பாத்துக் கிட்டேதாம் இருக்கா. முடிய மாட்டுங்கு. எல்லாரும் அரசாங்கத்தில வேல் பாக்கிற மாப்பிள்ளதாம் வேணும்ங்காளுவ, நம்மதாம் அவோ அருணாசலம் பிள்ளை சார்வா சொன்ன போது கேட்கலையே. சரி அண்ணாச்சி அம்பிப் பயலுக்கு கல்யாணம்ன்னு அவ அம்மை சொன்னா. இந்தப் பயகிட்ட கேட்டா அதுல்லாம் இல்லன்னு சொல்லுதாம். அண்ணாச்சி இவனுக்குல்லாம் கலியாணம் ஆகிட்டுதுன்னா நாம்லாம் நாண்டுக்கிட்டுச் செத்திருவேம்.

அம்பி கலியாணம் வேண்டாம்ன்னு முடிவெடுத்ததில எவ்வளவு பெரிய ஞானம் இருக்குன்னு ஒனக்குத் தெரியுமால. முடிவெட்ட கடைக்குப் போனா அவங்கிட்ட போயி ஒனக்கு ஒரு நாளைக்கு எவ்வளவு கெடைக்குன்னு கேக்கியாம். அவனவனுக்கு உள்ள தொழில்ல அவம் அவனுக்கு ஏதோ கெடைக்கும். பொருமாதல. எவனப் பாத்தாலும் இவம் எப்படி இவ்வளவு பெரிய ஆளான்னான்னும் கேக்காதல. திருந்தவே மாட்டியா.

ஒங்க மாமா மக அந்தப் புள்ள இருக்குல்லால அவளக் கட்டிக்க வேண்டியது தான. ஒங்க அம்மைக்கும் அவம் பொண்டாட்டிக்கும் ஆகாதும்பே. பொறவு கல்யாணம் எப்படி ஆகும். கொஞ்சம் அந்தப் பிள்ளைக்கு பல் ஒசந்திருக்கு அத வச்சுக்கிட்டு ஒங்க அம்மைக்கும் அவ அம்மைக்கும் ஆகாதுன்னு கத விடுத. எல.. சினிமாவப் பாத்திட்டு அத மாரியே கெடைக்குமான்னு பாத்தா ஒங்களுக்கெல்லாம் கல்யாணமே கெடயாது. போல காலேல வந்து மத்தவனைப் பத்தியே பேசிக்கிட்டு.

நீ திருந்தவே மாட்டியால சம்முவம். அடுத்தவனுக்கு என்ன நடக்குன்னே பாத்துக்கிட்டே அலயுதீய. ஒம் புத்திகுத் தாம்ல

ஒண்ணும் நடக்க மாட்டேங்குது. எல கல்யாணம் எல்லாம் தலையில எழுதியிருக்கணும்ல.

'மாடு வாய்க்கும் மணாளனுக்கு பொண்டாட்டி வாய்ப்பா புண்ணிய வாளனுக்கும்பாங்க' எங்க அப்பா. இன்னொண்ணும் சொல்லுவாங்க 'ஒருத்தம் பொண்டாட்டிய ஒருத்தம் கொண்டு போசு முடியாது'ம்பாங்க. எதாவது ஒரு பொண்ணைக் கட்டி வாழ்க்கையைத் துவக்கு. எல்லாம் நரைச்ச பொறகு ஒருத்தியும் வர மாட்டா. பொறவு மின்னடிப் படித்துறையில் ஒக்காந்தே வாழ்ந்திர வேண்டியதுதாம், நீ போயி ஒங்கம்மைய வரச் சொல்லு. நாம் அவகிட்ட பேசிக்கிடுதேம்.

சரி அண்ணாச்சி.

எல அதே பழைய சைக்கிள்தானா. பொறவு வா ருபா தாரேன். இந்த டிவிஎஸ் வண்டி ஒண்ணு பழசைப் பாத்து வாங்கிக்க சரியால.

சரி அண்ணாச்சி.

அம்மைய வரச் சொல்லு

எய்யா.. நாம் கயத்தாத்துக்காரி வந்திருக்கேம், சம்முவத்துகிட்ட ஒங்க அம்மைய வரச் சொல்லுன்னு சொன்னேளாம்லா.

ஆமளா, அந்தப் பையலுக்கு ஒரு தாலிய சீலையக் கட்ட வேண்டாமா. வயசும் முப்பத்தி இரண்டு இருக்கும்ல்லா. ஒங்க அண்ணன் மக வேண்டாம்ன்னா, ஒங்க விட்டுக்காரம் தங்கச்சி மக இருக்குல்லா. அதக் கட்ட வேண்டியது தான்.

அந்தப் பிள்ளையப் பத்தி ஊரில் நல்ல பேச்சே இல்லையே அய்யா.

ஓ அதுதான் காரணமா. ஏளா ஒன்னய என்னவெல்லாம் பேசினானுவ இந்த ஊர்க்காரனுவ. கொண்டை பன் வச்சுப்

போட்டத்துக்கே பேசினானுவளா இல்லியா. ஊரு ஆயிரம் பேசும். அந்தப் பிள்ளையும் தையல் படிச்சிருக்குல்லா. நா அதுக்கு ஒரு தையல்மிஷின் வாங்கிக் கொடுத்திருதேம் என்னா. ஒங்க வீட்டிலயே வச்சுத் தைக்கட்டும். என்னா. அவங்க வீட்டில நாம் பேசிக்கிடுதேம். சரியாளா. இல்லேன்ன ஒம் மகம் நாண்டுக்கிட்டு நின்னு செத்திருவேம்ங்காம்.

•

என்ன சம்முவம் அந்தப் புள்ள எப்படில இருக்கா.

உண்டாயிருக்கா அண்ணாச்சி.

நல்ல மருந்து மாத்திர வாங்கிக் குடுல. நல்லா இரு நல்லா இரு.



எல அய்யா என்ன புள்ளல. அழாதல. இது என்ன கூத்து. எல்லாப் பயட்டயும் நீர்தாம் ரொம்பத் தைரியமான ஆளுன்னு நாம் சொல்லிட்டிருக்கேம். நீரு இவ்வளவுதானா. கோட்டிக்காரப் பயலே. மொதல்ல அழுகய நிறுத்து. என்னதுன்னு சொல்லிட்டு, அப்படி ஒரமா ஒக்காந்து இன்னிக்கு பூராம் அழுல. யார் கேக்கா. ஒங்க பெரிய அய்யாதாம் பெரிசாத்தான வீட்டக் கட்டிப் போட்டிருக்காக. சொல்லுல எங்கம்மேல்லா.

எம் அண்ணாச்சி எனக்கு மட்டும் இப்படி எல்லாம் நடக்கு.

எய்யா அதத்தானல நாம் கேட்டுக்கிட்டே இருக்கேம்.

எங்க அத்த மகன் இருக்காம்ல்லா அண்ணாச்சி.

யாரு அந்தப் பள்ளிக்கூடத்து வாத்தியானாடே.

ஆமண்ணாச்சி. என்னய ரொம்ப அசிங்கப் படுத்திட்டாண்ணாச்சி.

சொல்லுடே என்ன அசிங்கப்படுத்தினாம். எதுக்கு அசிங்கப்படுத்தினாம். சொன்னாத்தான அது அசிங்கமா இல்லியான்னு புரியும். சொல்லுடே.

அண்ணாச்சி, அவம் மகனுக்கு கலியாணம்ன்னு சொன்னேம்ல்லா.

ஆமா சொன்னீரு. அந்த உறுதி பண்ணிற அன்னிக்குக் கூட மதுரையில் ஒரு கல்யாணத்துக்குப் போயிட்டு, அவங்க ரொம்ப மரியாதையானவங்கன்னு சொன்ன. அங்க சாப்பிடாம இங்க இவம் கூப்பிட்டாம்ன்னு ஒடனய வந்தியே. மதுரைக்காரனுவ கூட அண்ணாச்சிதான் தாலி எடுத்துக் கொடுத்தாவ. குடுத்திட்டு ஒரு வாய் வாய் சாப்பிடாம போயிட்டாவளே. அதத்தாம் ஆத்த முடியாம சங்கடப்பட்டிருக்கோம்ன்னு என் கிட்ட சொல்லி வருத்தப்பட்டானுவன்னு சொன்னேம்ல்லாடே..

ஆமண்ணாச்சி. அவம் அந்தப் பய கண்ணாடி போடுவாம்ல்லா அண்ணாச்சி. அது பொண்ணு வீட்டுக்குத் தெரியக் கூடாதுன்னு நெனச்சுக்கிட்டு எங்கிட்டச் சொன்னான். நாம் சொன்னேம். மதுரையில் போயி லென்ஸ் வச்சுக் கூட்டிட்டு வந்திருவோம்ன்னு சொல்லியிருந்தேன். சரின்னு சொல்லி யிருந்தான். உறுதி பண்ணுத வீட்டுக்கு வந்திருந்தேம்லா. ரெண்டு நா கழிச்சு மதுரையில் இருந்து டாக்டர் என்னிக்கு கூட்டிட்டு வாரீங்கண்ணு கேட்டாருண்ணாச்சி. நான் ஒடன இவங்கிட்ட கேட்டேன். எல்லாரும் போயிட்டாங்களான்னு. அவங் கிறுக்கன் மாரி ஒருத்தரும் போகல. அப்படித்தான் இருப்பாங்க. நீங்க யாரு அதக்கேக்கன்னு சத்தம் போட்டுப் பேசிட்டு போனை வச்சிட்டாம் அண்ணாச்சி. அப்புறம் எங்கிட்ட பேசவுமில்ல. என்னையக் கல்யாணத்துக்குக் கூப்பிடவுமில்ல.

என்னடே எனக்கு ஒண்ணும் புரிய மாட்டேங்குத.

ஒண்ணும் இல்ல அண்ணாச்சி. எங்கம்ம சொல்லிருக்கா ஒரு நாளும் அவங்கல்லாம் கூப்பிட்டாங்கன்னு போயிராத. அவனுவள்ளாம் நல்லவம் இல்லேன்னு. அத மறந்திட்டுப் போனேம்ல்லா. அதுக்குத்தாம் பட்டுக்கிட்டேம்.

எதுக்குல.

இல்ல அண்ணாச்சி. எங்க அத்த மாப்பிள்ள ஒரு மாதிரி. இந்தப் பயகிட்டயும் அதே புத்திதாம் இருந்திருக்கு. நான்ல்லா எங்க அம்மே பேச்சே கேக்காமக் கேவலப்பட்டிட்டேன். அவங்க அப்பா இந்த வாத்தியானுக்கு வேற எடத்தில் பொண்ணு எடுத்திட்டாரு. இவனுக்கு அவளுகதாம் எல்லாக் காரியத்திற்கும். ரெண்டாவது அதுதான சரி அண்ணாச்சி. அவங்கதான இவனுக்கு உண்மையா இருக்காங்க. அவங்ககிட்டயும் நாம் ரொம்பப் பிரியமா இருப்பேம். அந்தத் தங்கச்சியோட அம்மால்லாம் எங்கிட்ட ரொம்பப் பிரியமா இருக்காம்பாங்க.

ஒன்னயப்பத்தி எனக்குச் சொல்லுணுமாடே. ஒங்கிட்ட வேல பாக்கறவணுகளக் கூட ஒடம் பொறந்தவ னால்லாடே பாப்பே. இதுல்லாம் இந்த திருநவேலி ஊருக்கே தெரியுமே!

அவனுக்குத் தெரியலயே. அண்ணாச்சி. நல்ல படிச்சிருக்காம்ன்னு நானும் அவம் பேர்ல ரொம்ப பிரியம் வெச்சிருந்தேம். என்னயப் போயி இத்தனை சின்னத் தனமானவனா ஆக்கிட்டானே. இவம்ல்லாம் என்னத்தப் படிச்சு வாத்தியானா இருக்கானோ. அவந்தாம் லென்ஸ் வைக்க விஷயம் யாருக்கும் தெரியக்கூடாது அத்தாம்னு சொல்லியிருந்தான். அதுக்குத்தாம் சொந்தம் எல்லாம் போயாச்சன்னு கேட்டேன். அவம் அதத் தப்பா புரிஞ்சிக்கிட்டாம் போல. அவம் வீட்டுக்காரி சொந்தங்கள் இன்னும் இருக்காங்கனு நாம் கேட்டதா நெனச்சுக்கிட்டு என்னய அவமானப்படுத்திட்டாம் அண்ணாச்சி.

எய்யா விடுல. இப்படித்தாம் பல பய இருக்காம். இதுல அவம் சொல்லிக் குடுத்து பள்ளிக்கூடத்தில் பிள்ளைக வெளங்குமால. எல ஒன்னயல்லாம் புரிஞ்சிக்கணும்ன்னா அதுக்கு பெரிய அன்பும் அறிவும் வேணும்ல. இதப்

பயன்படுத்திக் கிடணும்ன்னு நம்ம அப்பன் வள்ளுவர் சொல்லியிருக்காரு. அத நான் ஒனக்குச் சொல்லாமப் போனது தப்புத்தாம் டே. இந்த மாரி வெபரங்கெட்ட பயலுவ நம்ம விட்டு வெலகறது நமக்கு பெரிய இன்பம்ன்னுல்லா சொல்லுதாரு. ஆமா அந்தக் கொறளப் படிச்சா ஒனக்குப் புரியும்ல்லா.

"பெரிதினிது பேதையர் கேண்மை பிரிவின் கண்

பீழை தருவதொன்றில் "னுல்லா நச்சுன்னு சொல்லிருக்காரு. இனிமே இப்படி எம்முன்னால இப்படி முட்டாத்தனமா அழப்படாது சரியாம்மா. எங்க ராஜால்ல.

சரி அண்ணாச்சி.



எல என்னா எத்தன தடவ சொன்னாலும் கேக்க மாட்டியால. எல நாக்கக் கட்டுப்படுத்தணும்ன்னு வள்ளுவர் சொல்லிருக்காரு. யாகாவாராயினும் மட்டுமில்ல. சாப்பாட்டிலும் சொல்லிருக்காரு. அசிங்கப்படவே மாட்டியா. ஒம் நாக்க அறுத்தாத்தாம் சரிப்படும்ன்னு நெனக்கம். சட்டதிட்டமா எத்தன நா தின்னாச்சு. குடும்பம் வாழ்க்கைன்னா என்னன்னு புரியாதல ஒனக்கு, அறுபது ஆச்சு இன்னும் என்னல.

ஏன் அண்ணாச்சி இத்தன வருஷமா செய்தவதான இப்பம் மட்டும் செய்யமாட்டேம்ன்னு சொல்லுதா அவள சத்தம் போடாம என்னய மட்டும் சத்தம் போடுதேள. இது மட்டும் என்ன நியாயம்.

முன்னால இருந்த மாரியால ரெண்டு பேரும் இருக்கீய,

அது வயசாச்சில்லா அண்ணாச்சி,

அப்பாடி, வயச ஆச்சுன்னு ஒனக்கு நெனவே இல்லியோன்னுதாம்ல எனக்கு சந்தேகம். நல்ல வேள, எல அதே வயசுதான ஒன் நாக்குக்கும். திரும்ப திரும்ப அந்தப் பிள்ளைய சொதி முன்ன மாரி வெக்க மாட்டுங்கான்னா. வெக்காம இல்லயால. முன்ன மாரி வெறகு அடுப்பால. அந்தப்

பிள்ள அதிலேயே பழகுனது. இப்பம் ஒம் புள்ளைக என்னத்தையெல்லாமோ கொண்டு மாட்டி வச்சிருக்கு. அவளுக்கு கையும் காலும் முன்ன மாரி ஒட மாட்டுங்கு. நீரு அதே சொதி அதே வத்தக் குழம்புன்னு அலஞ்சா பொம்பள என்னல பண்ணுவா. ஒரு அவியல் வப்பா பாருங்க அண்ணாச்சி. சாப்பிட்ட ஒடனே படுக்கத்தோணும். செத்துக் கூடப் போயிரலாம்ன்னு தோணும்ங்கிய. எல அவளச் சொல்லணும். ஒனக்கு வெதம் வெதமாப் பொங்கிப் போட்டு கெடுத்திருக்கா.

உளுந்துல்லாம் முன்ன மாரி சுத்தமா இருக்கால. உளுந்தங்களி எப்படி இருக்கும்க. புள்ளைக ருசிக்கும் அவளுக்கு செய்யத் தெரியல. புள்ளைக ஹோட்டல்ல கண்டது கழியதச் சாப்பிட்டுட்டு வந்தா. அவ ஒனக்கு மட்டும் பொங்கிதாராளே. பெருந்தன்மையா திம்பியா. அத விட்டுட்டு அப்படி வேணும் இப்படி வேணும் எவனுக்காவது தெரிஞ்சா சிளீப்பாம்.

என்னளா இவந்திருந்த மாட்டாம்மா. இந்தப் பயலுக்கு வயித்துப் பசி இல்லம்மா. நாக்குப் பசி ருசி ருசின்னு அலயுதாம். எல அவளுக்கும் ஒன்னய மாரி வயசாயிடுச்சுல்லா,

ஆம அண்ணாச்சி ஒரு வயசுதாம் வித்தியாசம். அம்மேட்ட சொன்னேன். நானும் ஒங்க அப்பாவும் அப்படித்தான்னு சொல்லி அந்தச் சண்டாளி என் கழுத்த அறுத்திட்டா.

சரி ஒடனே நாம் இந்தப் பொண்ண கலியாணம் பண்ண முடியாதுன்னு சொல்லிர வேண்டியது தானல. கட்டி அஞ்சு புள்ளைகளையும் பெத்திட்டு இப்பம் வந்து பேசுதய. ஒன்னய செருப்பால அடிக்கணும். அவ ஒடம்பும் அசந்து போயிருக்கும்ண்ணு ஒங்களுக்கு எம்ல புரிய மாட்டேங்கு. எல்லாப் பயலுவளும் ஒன்னய மாரித்தாம் இருக்கானுவ. ஆனா குடும்ப சமாச்சாரம் உணர்ந்தாத்தான் புரியும்.. நீதாம் நாக்குக்கு ருசியாத் திங்கணும்னு அலயுத. பொம்பளைகளப் படுத்தாதீங்கல.

அண்ணாச்சி வணக்கம்.

ஏல பஞ்ச வர்ணம் எப்பல வந்த அமெரிக்காவில் இருந்து. புள்ள குட்டில்லாம் நல்லாருக்கா.

ஒங்க வாழ்த்துல நல்லாருக்கோம் அண்ணாச்சி.

புள்ளைல்லாம் தமிழ் பேசுதாடே.

ஆமா அண்ணாச்சி. வீட்டில் நாம் அவங்ககிட்ட தமிழ்ல தாம் பேசுதேம். அதுக, அதனால தமிழ் நல்ல பேசும். படிக்கவும் சொல்லி கொடுக்கேம். எழுதவும் செய்யும்.

நல்ல தமிழனாத் தான் வாழ்ந்துகிட்டிருக்கே. எம்புட்டு மகிழ்ச்சியா இருக்கு கேக்கையிலேயே. நம்ம ராமசாமிப் பய வந்தாம். அவனே இங்கிலீஷ்ல தாம் பேசுதாம். புள்ளைகளுக்கு சுத்தமாத் தமிழ் தெரியல. அவம் வீட்டுக்காரி அமெரிக்காவிலயே பொறந்த மாரில்லா பேசுதா. அது மட்டுமில்லேடே இந்தியா ஒரு அழுக்கு நாடுங்கா. இந்தப் பயலும் ஒண்ணும் கேக்க மாட்டேங்காம். நான் நல்லாக் குடுத்து

விட்டேன். என்ன பண்ண தாங்க முடியல. வீரவநல்லூர்ல அரசாங்கப் பள்ளிக் கூடத்தில் அவ படிச்சதும் அவ அம்மையும் அப்பனும் இவள வளக்கப்பட்ட கஷ்டங்களும் எனக்குல்லால தெரியும். அங்கேல்லாம் தமிழ்லாம் பேசுனா மரியாதை கிடையாதுங்காடா.

அண்ணாச்சி நீங்கதான அண்ணாச்சி அந்தப் புள்ள எஞ்சீனியரிங் படிக்க எல்லா உதவியும் செஞ்சீக.

எல நாம் எங்க செஞ்சேன். அது நேரத்துக்கு காந்திமதியம்மை ஏங்கையில ரூபாயைக் குடுத்தா. குடுத்தேன். படிப்பிலே கெட்டிக்காரப் பிள்ளையில்லா. ராமசாமி பெரிய பண்ணையார் வீட்டுப் பயல்லா. பிள்ள அழகா இருந்தாளா. கட்டிக் கிட்டாம். அமெரிக்காவுக்கு கூட்டிட்டுப் போயிட்டாம். அங்கன போயி ஒரு வேலயையும் வாங்கிக் கொடுத்திட்டாம். எல அதுக்காக தல கால் தெரியாம ஆடுத்து என்னடே நியாயம். சரி போனாச் சரிதாம்ன்னு நெனச்சிட்டேம். நீயாவது மறக்காம தமிழ் சொல்லிக் குடுத்திருக்கயே ஒம்புள்ளைகளுக்கு. நல்லா இரிடா அய்யா. ஒங்குணத்துக்குதான கல்லிடை குறிச்சிக்காரி வந்தா. நல்லா இருல புள்ள குட்டியோட.

நாளைக்கு வாரேண்ணாச்சி அவளயும் புள்ளைகளையும் கூட்டிக்கிட்டு.

எல் இங்கன அண்ணாச்சி வீட்டில சாப்பிடு என்னா.

என்ன அண்ணாச்சி ஒங்க சோத்தைத் தின்னு வளந்த ஒடம்பு அண்ணாச்சி. நாளைக்கு வாரேம்.

அண்ணாச்சி நாம் அனவரதம்ல்லா பேசுதேம்.

எல வீரவநல்லூர்ல இருக்கியா. இல்ல வல்லநாட்டில் இருக்கியா.

ஆமண்ணாச்சி ஒங்க கொழுந்தியா விட்லத் தாம் அண்ணாச்சி இருக்கேம்.

எல வல்லநாட்டில இருந்துதாம் அரைமணி நேரத்தில வந்திரலாம்ல்லா. நேர்ல வந்தா எனக்கும் ஒரு மகிழ்ச்சி இருக்குமல்லால.

அண்ணாச்சி. இங்கன வந்த இடத்தில் படுத்திட்டா. அதாம் அண்ணாச்சி. வர முடியல்ல.

என்னல செய்யுது.

இல்லண்ணாசி வெறும் காச்சத்தான்.

சரி வேற என்ன வெஷயம்.

ஒங்க மக அமெரிக்காவில இருந்து கூப்பிட்டா.

எல நீயும் அவளும் போயிட்டு வாரதுதான்.

எங்கள யாரு கூப்பிடுதா.

பொறவு எதுக்குடே கூப்பிட்டா.

அவ ரெண்டு பொட்டப் புள்ளைக்கும் இங்கன பள்ளிக் கூடத்தில இடம் வேணுமாம்.

எல அவதாம் நம்ம நாடே அழுக்குன்னு எண்ட்டயே விண்ணானம் பேசிட்டுப் போனாளே. இப்பம் அமெரிக்காவில பள்ளிக்கூடம் இல்லையாமா. இங்கன சேக்கணும்ங்கா.

அதாம் ஒங்க் கிட்ட பேசச் சொன்னேம். பயப்படுதா.

நாம் என்னல பூச்சாண்டியா.

இல்ல அமெரிக்காவில இருக்கோம்ன்னு தலை கால் தெரியாம ஆடினாள்ளா. அதுதாம் பெரியப்பா சத்தம் போடு வாள்ளான்னு.

எல்லாம் பெரிசு பெரிசா இருக்கு ஒரு நாட்டில. கொஞ்சம் விருப்பம் வரத்தான செய்யும்.

எல என்னம்மா. புள்ளைகள இங்கன சேக்கணும்ன்னு சொன்னியாம். அப்பா சொன்னாம். ஒம்புள்ளைகளுக்கு எடம் நாமல்லா வங்கித் தாரேன், அது சரி அங்கன இல்லாத பள்ளிக் கூடங்களால.

இல்ல பெரியப்ப நம்ம டாக்டர் சுப்பையா அவரு பொம்பளப் புள்ளைகள அங்க அவங்க அப்பா அம்மேட்டத்தாம் விட்டிருக்காரு.

இங்கன ஒண்ணும் சரியில்ல அதாம் அங்கன அப்பா அம்மைக்கும் ஒரு சந்தோஷமா இருக்கும்ல்லா.

அனுப்பி வை. நாம்ல்லா சேத்து விடுதேம்.



அண்ணாச்சி பலவேசம் அண்ணாச்சி வந்திருக்காங்க

எல அப்பதய கூப்பாட்டைக் கேட்டுட்டேம்ல்லா. வெடிய வர மாட்டாரே என்னவாம்.

வணக்கம் கொஞ்சம் பம்பாய்க்குப் போயிட்டேம். அதாம் ஒரு மாசமா வர முடியல்ல. நேத்துத்தாம் வந்தேம். அதாம் வந்து பாத்திட்டுப் போவோம்ன்னு வந்தேன்.

சவுண்ட் பாக்ஸ் அப்படியே இருக்குல்லா அண்ணாச்சி.

இந்தப் பயல்லாம் ஒரு பய. அங்கன பாம்பேயில் நம்ம ஊரு பிராம்மணப் பிள்ளைகள்ளாம் பெரிய பெரிய கம்பெனிலேல்லாம் வேல பாக்கானுவ. நம்ம சுப்பய்யர் மகன் நீலகண்ட அய்யர் மகன். இவனுகளையெல்லாம் போகிற வழியில பாத்தேம். பெரிய வீட்டு அய்யா சௌக்கியமான்னு கேட்டானுவ.

இவனும் ஒரு பிராம்மணப் பையம். விதி என்ன சொல்லுதீய வியீதான்.

சரி அங்கன போலீஸ்ல மாட்டலயா அண்ணாச்சி.

எல அம்பி ஒங்கிருத்துருவம் போகாதாடா.

அதெல்லாம் உடம்பொறந்தவை ஒழியாது.

பெரிய கட்டபொம்மன். வாய மூடுல. அவான ஒரு மாசம் கழிச்சு வந்திருக்கா. அவாளப் போயி வம்பிழுத்துக் கிட்டு.

என்ன.. மக, மருமகம்ல்லாம் நல்லாருக்காளா. அவ உண்டாகியிருக்காளா.

ஆமா அதனால் தான போக வேண்டியதாயிப் போச்சு. இவ ஒரெ நெலயா நின்னா. வீட்டுக்குப் மக போகணும்ன்னு. அதாம் போனேன். கொஞ்சம் செலவுதாம். அவாளும் ஒரு நல்ல கம்பெனில மேனேஜரா இருக்காகள்ளா. நல்ல புள்ள எல்லாப் பக்கமும் சுத்தி காம்பிச்சா. பொறவு அவ அண்ணம்மாரு போயி வளைகாப்புக்கு கூட்டிடிட்டு வாரேன்னு சொல்லிட்டானுவ.

நம்மால முடியாதுய்யான்னுட்டா நம்ம வீட்டுக்காரி இங்கன வல்லநாட்டுக்கும் சேரன்மாதேவிக்கும் போனவ இம்புட்டுத் தூரம் போனதில அசந்திட்டா.

வயசாயிட்டுல்லா.

ஒங்களுக்கு வக்கணையா பொங்கிப் போட்டே அவோ நொந்திருப்பாகள்ளா.

எல அய்யர் கம்ம இரிலே.

ஆனா இவாள் வார்டுல இவாளுக்கு என்ன பேரு தெரியுமா அண்ணாச்சி. எல்லாரும் கடவுளக் கும்பிடுத மாரில்லா கும்பிடுதாம்.

ஏய் அவாளுக்குத் தெரியாதுன்னு சொல்லுதியோடே.

அதாம் பலவேசம் பிள்ளை ஒம்பதாவது வார்டு கவுன்சிலரா இருந்தாக. எவம் வந்து கூப்பிட்டாலும் அவம் சைக்கிள்ள பின்னால ஒக்காந்துகிட்டு முனிசிபல் ஆபீசுகுப் போயி அந்தப் பய காரியத்த முடிச்சுக் கொடுத்தருவாகள்ளா. அவாளுக்கு காந்திமதியும் நெல்லையப்பனும் குடுத்த வரம்தானல இந்தச் சத்தம். அவோ நகரசபைத் தலைவர் இவாள் சத்தத்திலேயே ஆடிப் போயிருவாகள்ளா. கூட்டிட்டுப் போன பைய வெத்தில சீவல் வாங்கிக் குடுத்தா போதும்.

இப்பமல்லாம் குவாட்டரும் பிரியாணியும் பொம்பளையும் கேக்கானுவ அண்ணாச்சி.

அதுல்லாம் ஒரு காலம்ல. மூணு தடவ ஜெயிச்சாகள்ளா. கட்சி ஒண்ணும் கெடயாது. மக்கள் இவரு சேவ செய்யப் பொறந்தவருண்ணு தெரிஞ்சு வெச்சிக்கிட்டுல்லா ஓட்டுப் போட்டாம்.

இப்ப 200 ரூபா கேக்கானுவ. நெக்க பயலுவளும் இவனுகளுக்கும் குவார்ட்டர் பிரியாணில்லாம் வாங்கிக் குடுக்கானுவ அண்ணாச்சி.

எல அம்பி இப்படியெல்லாம் நடந்தேம்ன்னா அவோள்ளா முக்கியக் காரியம். எம் வீட்டுக்காரிக்கு ஒரு பெரிய நோய் வந்திட்டுது அவள திருவனந்தபுரத்துக்கு அனுப்பி வச்சு காப்பாத்துனது அய்யாவும் அவுக பணமும்ல்லா.

இல்ல அய்யா. நீங்க பண்ணுத நல்ல காரியங்களுக்குத் துணையிருந்தேம்.

எம் பயலுவ படிச்சு இன்னிக்கு ஒரு நல்ல நெலயில் இருக்கானுவண்ணா அவோள்ளாவே அம்பி. இந்தப் பிள்ளைக்கு பாம்பேல மாப்பிள்ளைத் தரம் இருக்குன்னு சொன்ன ஒடனே அதை சரியா வெசாரிச்சு அவாள்ளா அந்தக் கலியாணத்த நடத்தி வச்சாக.

விடுங்க பலவேசம்பிள்ள. எம்புராணம் பாடாதீக.

இது உண்மைல்லாய்யா. நான்ல்லாம் நல்லவனா இருக்கதுக்கு ஒங்க பணம் எத்தன பெரிய ஒதவி. நாட்டில் எத்தனை பேரு இருக்காம் ஒங்கள மாதிரி.

சரி சரி விடுங்க அதையெல்லாம்.

அது சரி நாம் வந்து இத்தன கூப்பாடு போட்டுக் கிட்டிருக்கேம் இந்த சமையக்காரத் தம்பி இன்னும் கொண்டு காப்பி குடுக்கலய. என்ன வெஷயம்.

அவ அம்மே மண்டையப் போட்டுட்டா. பய பம்பொழி வர போயிருக்காம்.

இருங்க..

அய்யா புள்ள நல்லாருக்காளா. அவ வந்து புள்ள பெத்ததுக்குப் பொறவு மருந்தெல்லாம் நாம் இங்கன அரச்சு கொடுத்து விடுவேம். என்னா சரியா. காப்பியக் குடிங்க,

நீங்க எதுக்கும்மா காபி போட்டுக் கொண்டு வந்தீய, சத்தம் அங்கன கேட்ட பொறவும் கேட்டுக்கிட்டு எப்படி சும்மா இருக்க முடியும். முழு உளுந்து தோசை சாப்பிட்டிட்டு போங்க.

பாத்தேளா சரியாத்தாம் வந்திருக்கேம். முழு உளுந்து தோசை நவதானிய தோசை. கேப்பை இட்லில்லாம் இங்கள் 'வந்தாத் தானய்யா கெடைக்கு.

மத்தியானமும் கூட்டாஞ்சோறுதான் இருந்து சாப்பிட்டிட்டு போங்க.

நாம் என்ன விருந்தாளியா ஒக்காந்து சாப்பிட்டுட்டு போவேன்னா திங்கப் போறேம்.

போம்போது கொஞ்சம் அடுக்குப் பாத்திரத்தில் அவளுக்கும் கொஞ்சம் குடுங்க. படுக்கையில் இருக்கா என்ன..

ஒண்ணும் இல்ல பம்பாய்க்கு போய்ட்டு வந்த அலச்சல்தாம் காரணம். அவ இருக்கப் போயிதாம் இவ்வளவு நா ஒடியாடி வேல செஞ்சேம். அவ படுத்தா கத கந்தலாயிரும். அவளுக்கு முன்னால போயிரணும்.

நல்லவங்க சொன்னா நடந்திரும்ன்னு அப்பா சொல்லுவாக. இந்த மனுசன் வேற இப்படிச் சொல்லிட்டுப் போறாளேன்னு நாம் சொன்னேம்ல வேலம்மா.

காலையில எவன் சைக்கிள் பின்னலயோ ஒக்காந்து ஆத்துக்குப் போயிக் குளிச்சிட்டு ஆத்துக்குப் போயிக் குளிச்சிட்டு வர்ற வழியில் போத்தி கடையில் வட்டக் கப்பில காப்பி குடிச்சிட்டு. வே போத்தி இப்பவே செத்திரலாம்வேன்னு சொல்லிருக்கா பலவேசம் பிள்ளை, வீட்டுக்கு வந்து வேட்டி மாத்திட்டு. சிவாய நமன்னு படுத்திருக்கா. எந்திரிக்கலயாம். தூங்கியாச்சு.



அண்ணாச்சி நம்ம மந்திரம் இருக்காம்ல்லா ஒருத்தன வெட்டிப்போட்டான் அண்ணாச்சி.

எல சரியாத்தானல இருந்தாம். என்ன எழவு. அன்னிக்கு கூட வந்திருந்தாம். இப்பம்ல்லாம் ஒழுங்கா கிருத்திருவமா இருக்காம்ன்னு அவ அம்மை கூட சொன்னாளல.

பொசுக்குன்னு கோபம் வந்திருது அந்தப் பயலுக்கு அவம் அப்பன மாதிரியே.

அவ அப்பங்காரம் கொலை பண்ணிட்டு ஜெயிலுக்குப் போம்போது இந்தப் பய ஆறு மாசம் அவ வயித்தில. அவம் ஆயுள் தண்டனை தாம் குடுத்தாங்க. அவம் ஆயுள் ஜெயிலிலெயே முடிஞ்சுச்சு. பன்னண்டாம் கிளாஸ் வர படிச்சானல. நாம் சொன்னதெல்லாம் கேப்பான..

அது நீங்க அவன ஒங்க மகம் மாரில்லா அண்ணாச்சி வளத்தீய. பதினஞ்சி நாள் ரிமாண்ட் பண்ணிட்டாங்க அண்ணாச்சி.

எல அந்தப் பிள்ள எப்பம் பாத்தாலும் கழுத்து ஆமக்கன் போயிட்டான்னாலும் வயித்து ஆமக்கன் காப்பாத்திருவாம்பாளே.

அது என்ன அண்ணாச்சி ஆமக்கம்.

ஒண்ணும் இல்லல கழுத்து ஆண்மக்கள்ன்னா தாலி கட்டுனவம். வயித்து ஆமக்கம்ன்னா, வயித்தில் பொறந்த மகன்.

நாம் கூப்பிட்டன் அண்ணாச்சி. இனிமே அங்கன எப்படி வருவேம். அவோ யாரு நமக்கு சொந்தமா ஒறவா. எத்தன பாசமா வளத்தாவோ. இந்தப் பேதில் போவாம் அவனுக்குப் பொறந்தவம் தான. அவ அப்பனப் போலவே ஆயிட்டான.

நல்ல வேள அய்யா ஒரு புள்ளயப் பாத்து வையிளா. இந்தப் பயலுக்கு ஒரு கால் கட்டுப் போடணும்ன்னாக.

நல்லவேள ஒரு புள்ள பொழச்சுதுன்னுட்டு ஒன்னு அழுதா அண்ணாச்சி.

எல அவள யாரும் போயி கீயி தொந்தரவு பண்ணாதீக. ஒரு வாரம் கழிச்சுப் போயிப் பேசிக்கலாம். புரியுதா அய்யரே. அங்கனயும் போயி எச்சித் தனமா எவனாவது சாராயம் வாங்கிக் குடுத்தானுவன்னு குடிச்சிட்டு ஒளரிக்கிட்டுத் திரியாதல சரியால.

இல்ல அண்ணாச்சி போ மாட்டேம்.

•

யெய்யா நாம் என்ன பண்ணுவேம்.

கொடலப்புடுங்குத மாரி அழாதே சங்கரம்மா.

ஏழா நாம் நல்லாத்தான வளத்தேம். பொறகு என்னம்பா.

சேரக்கூடாத பயலுக கூடல்லாம் சேர மாட்டானே, சிவபுராணம் சொல்லுவான தலை மாட்டில ஒக்காந்து. எல் அய்யா செத்ததுக்கு பின்னால தான் அய்யா தலை மாட்டிவ இருந்து சிவ புராணம் சொல்லணும்னு.

அந்தப் பேதிலபோவாம் நீங்க செத்ததுக்கு பின்னால் நாம் செத்திருவேம் பானேம்மா.

எல எய்யா அப்படில்லாம் பேசாதல. நீங்கள்ளாம் அய்யா செத்ததுக்குப் பொறவு அய்யா புகழப் பரப்ப வேண்டமாம்பேனே. எம்புள்ளயாத்தான வளத்தேம்.

அதாம்ய்யா காரணம்.

எங்க சொந்தக்காரனுவ அவ அப்பம் கூடப் பொறந்தவம் தாம்ய்யா என்னய ஒங்களோடு இருக்கான்னு சொல்லிருக்காம்ய்யா. அவம் காது கேக்க.

எங்கம்மையக் கூட தேவடியான்னு சொல்லு. அவ ஒம் மதினி. எங்க அய்யாவ எப்படில சொல்லலாம்ன்னுதாம்ய்யா அவன வெட்டிருக்காம்.

என் அன்பா ஒரு பயலக் கொன்னுட்டு. கடவுளே நாம் என்ன செய்வேம்.

எல எத்தன தடவ சொன்னாலும் ஓம்புத்திக்கு வெளங்காதால

என்னைய மட்டும் ஒங்களுக்கு ஏம் அண்ணாச்சி புடிக்கவே மாட்டேங்குது.

எல எவனையும் எனக்குப் புடிக்காமப் போகாதுடே. அவனுவளா அப்படி நெனச்சுக்கிட்டா நாம் என்ன செய்ய.

எல ஒன்னயப் புடிக்கல்லன்னா வீட்டுக்குள்ள விடுவனா.

சுவரேறிக் குதிச்சு வந்திருவம்லா.

இப்படி இருக்க ஒன்னய எனக்கு ஏம்ல புடிக்காமப் போகுன்னு நெனக்க.. முட்டாப் பயலே. எல்லாத்தையும் பாத்து பாத்து பொறுமப்பிடாது சரியால. ஒவ்வொருத்தனுக்கு ஒவ்வொரு வாழ்க்க அமையும். அதப் பாத்துப் பொறுமுதீய. அது கெட்ட பழக்கம்லா. ஒன்னயும் நாலு பய நல்லவன்னு சொல்ல வேண்டாமால. அதுக்குத்தாம் சத்தம் போடுதேம். எல நாம்

சத்தம் போடுதுதல்லாம் அன்புனாலடா. நீ அந்த ஒரு குணத்த விட்டுட்டேன்னு வை. ஒன்னய யாருல கொற சொல்லுவாம். செருப்பக் கொண்டு அடிச்சிருவேம்லா.

பொறாமப்படல்லா இல்லை அண்ணாச்சி. ஒரு தகுதியும் இல்லாம் பெரிய ஆளா வந்திருதானுவ. பெத்த தகப்பனையும் தாயையும் தெருவில விட்டிட்டு. கோயில் கோயிலா லட்சார்ச்சனை பண்ணுதானுவ. கட்டின பொண்டாட்டிய கை விட்டுட்டு, வீட்டு வேளைக்கு வந்த ஏழப் புள்ளய ஏமாத்தி அவளக் கொண்டு ஒரு வீட்ல கொண்டு வெச்சிக்கிடுதானுவ. அவனுவளக் கண்டா புடிக்கல. அதத் தப்புன்னு எப்படி சொல்லுதீய. சொல்லுங்க.

நீ நியாயமா நெனக்க. இந்தப் பயலுவ இதப் பொறாமன்னில்ல சொல்லுதானுவ. எங்க அய்யால்லா நீ. அதுல்லாம் சரிதாம். கடேசியில் எல்லாப் பயலும் கட்டேல போகும்போது எவ்வளவு நாறிப் போறான்னு பாத்தியா. வேலைக்காரப் புள்ளய ஏமாத்தின பய சாகும் போது பாத்தியால. அந்தப் புள்ள சொந்தக்காரனுகளும் வந்து நின்னு அவ புள்ளைகளுக்கு ஒரு வழியச் சொல்லிட்டு பொணத்த தூக்கணும்ன்னு ரெண்டுநாளா நாறிக் கிட்டுக் கெடந்தானா இல்லியா சொல்லு. போலீஸ்ல்லாம் வந்திச்சா? இல்லைய. அதையும் நாந்தானய்யா முடிச்சு வெச்சேம். ஊருல இருக்கு எடைக் கல்லும் தராசும்ன்னு ஓங்க பெரியம்மை எத்தன தடவ சொல்லுவா. தெரியும்லால.

எல என்னயவே எத்தன பேரு எங்கூடப் படிச்சவம்ல்லாம் பத்தாங்கிளாஸ் படிச்ச பய அவனுக்கு வந்த வாழ்வப் பாருன்னு பேசுதாம். எங்க அம்ம சந்தித் தெருவில பொறந்தேம். அவ எனக்குத் தமிழத் தந்தா. நாம் புகழ் பெறுதேம்ன்னா எங்கம்மை அருள். நான் முழுசா அவள நம்புதம். நீயும் இன்னொரு இருபது வருசம் போச்சுன்னா புரிஞ்சிக்கிருவேடே.

ஒன்னயப் பாத்து மத்த பயலுவள்ளாம் பொறாமப்படுதாம் என்ன தெரியுமா, வள்ளிப் பயலுக்கு வந்த வாழ்வப் பாத்தியாங்கானுவ ஒம்பொண்டாட்டி அழகும் குணமும் ஊர் பூராம் பேசுதாங்கள்லா. பிச்சைக்காரனுவ கூட புளியங்குடி அம்மா வீட்டுக்குப் போனா நாலு நாளைக்குச் சாப்பிடலாம்ங்கானுவ. தெரியாதால. ஒவ்வொருத்தனுக்கு ஒவ்வொண்ணு கெடைக்கும். ஒனக்கு கிடச்சிருக்கது நிம்மதியான வாழ்க்கைல்லா அத வெச்சுக்கிட்டு சந்தோஷமா இரிடே. என்னா நாஞ்சொல்லுதது புரிஞ்சிக்கிட்டில்லா.16

ஏல அம்பி திருச்செந்தூருக்குப் போயிட்டு வந்திருதேம். சரியா. யார் வந்தாலும் சொல்லு சாயங்காலம் வந்திருவேம்ன்னு. ரொம்ப முக்கியம்ன்னா செல்லில் கூப்பிடு என்னடே.

சரி அண்ணாச்சி. இன்னிக்கு என்ன தீடிர்ன்னு திருச்செந்தூருக்கு அண்ணாச்சி.

ராவன்னா நம்ம விட்டுட்டு போனது இன்னிக்குதாம்ல. அதாம் அவங்கிட்ட போயி நம்ம அப்ளிகேஷனையும் கொடுக்கணுமல்லாலே.

அப்பமே எங்க அப்ளிகேஷனையும் ஒங்களுக்கு முன்னால பைசல் பண்ணிரச் சொல்லுங்க. நீங்க இல்லாம நாங்க எதுக்கு அண்ணாச்சி.

எல பொறப்படும்போது அழ வைக்காதல. வரட்டுமா.

சரி அண்ணாச்சி.

•

அண்ணாச்சி நாம் அம்பில்லா பேசுதேம்.

எல எய்யா நம்ம போன்ல வேற யாருல பேச முடியும் சொல்லு.

நம்ம மளிகைக்கடை சண்முகசுந்தரம் அண்ணாச்சியோட பையங்க நாலு பேரும் பொண்டாட்டி புள்ளையோட வந்தாங்க. நாம் சொன்னவுடனே. நாங்க சாயங்காலம் கேட்டுக் கிட்டு வாரோம்ன்னு போயிட்டானுவ.

சரில நாம் பொறப்புட்டுட்டேன். வழியிலேயெ நம்மாழ்வாரையும் பாத்துட்டு வாரேம் என்னா.

அண்ணாச்சி அவரு ஒருத்தரத்தான் பெருமாள் வந்து பாத்தாருன்னு அடிக்கடி சொல்லுவேள்லா அண்ணாச்சி.

எல எய்யா இந்தக் குடில்லால ஒன்னய போட்டு ஆட்டுது. இல்லேன்னா ஒம் ஞாபக சக்தி எவனுக்கில உண்டு.

அண்ணாச்சி அவனுவ எல்லாம் வந்திருக்கானுவ. புள்ளைக இல்ல அவங்க மட்டும் பொண்டாட்டி மாரோட வந்திருக்கானுவ.

சரி வாரேம்.

எய்யா என்ன எல்லாருமா பெரியப்பாவ பாக்க வந்திருக்கீய. பெரியம்மை போனதுக்கு வந்தது. பொறகு இப்பம் தாம் பெரியப்பா வீட்டு வாசலுக்கு வந்திருக்கீயோ. சொல்லுங்கடே என்ன வெஷயம்.

இல்ல அப்பாவுக்குக் கொள்ளி போட வந்தது. அதுக்கு அப்புறம் இப்பந்தாம் வர முடிஞ்சது. அதாம் வந்தோம்.

சரிடே ஒண்ணு மண்ணா வந்திருக்கீங்க. அவன் கருமாதிக்கு ரெண்டு பய லீவு கெடைக்கலன்னு வரவேயில்லையே. இப்பம் கெடச்சிட்டு போல சொல்லுங்கப்பா.

ஒண்ணுமில்ல பெரியப்பா. அப்பா எல்லாத்தையும் பார்வதி பேர்ல எழுதி வச்சிட்டான்னு எங்க மாமியார் சொல்லித்தாம் எங்களுக்குத் தெரியும். அதாம் நாங்க இத்தன பேரும் இருந்தும் எங்களப் பத்தி நெனக்காம அப்பா இப்படி செஞ்சிருக்காகளே. நீங்க தாம் இதுக்கு ஒரு தீர்ப்புச் சொல்லணும்.

என்னத்த தீர்ப்புச் சொல்லணும் சொல்லுங்கடே. ஒங்க மாமியார் சொன்ன உடனே வந்திட்டீங்களே. ஒங்களப் பத்தி நெனச்சதில தாம்டே அந்தப் பய இப்படிப் பண்ணினாம். அவம் கிட்னி கெட்டுப் போச்சுன்னு டாக்டர் மாரு சொன்ன ஒடன ஒங்கள அத்தன பேரையும் நாம்தானடே போன்ல கூப்பிட்டேன். எவனாவது வந்தேளால. எனக்கு லீவு இல்லேன்னீய் புள்ளைக படிப்பு கெட்டிரும்ன்னீய. அவனுக்கு எவனாவது ஒரு கிட்னியக் குடுங்கலன்னேன். கேட்டேளால. இப்பம் வந்து..

அவம் ஒண்ணும் படிக்காத பய. சந்திபிள்ளையார் கோயிலே கதின்னு கெடந்தாம். பிள்ளையார் கொடுத்தாரு பேரும் புகழுமா ஆயிட்டாம். ஒங்கள் எல்லாம் எப்படி எவ்வளவு வளத்தான்னு எனக்கு ஞாபகம் இருக்கே. நான் என்னத்தச் சொல்ல. எல நீங்க பாக்க வேலையெல்லாம் ஒங்களுக்கு வாங்கிக் குடுக்க அந்தப் பய எவ்வளவு செலவழிச்சிருப்பாம்ல. இப்பம் பொண்டாட்டிமாரும் மாமியாமாரும் வந்திட்டாங்கன்னு அவன மதிச்சீங்களா டே. எல ஒங்க கையால் ஒங்க சம்பாத்தியத்தில் அந்தப் பயலுக்கு ஏதாவது வாங்கித் தந்திருப்பீகளாடே.

ஒங்க மாமன்மாருக்கு.. அது என்னடே.. வாக்கிங் ஸ்டிக் வாங்கத் தெரியது. பெத்து ஆளாக்கி வளத்த தகப்பனுக்கு ஒண்ணு வாங்கித் தரணும்ன்னு நெனப்பே வந்தது கெடையாது. இப்பம் வந்து அப்பான்னா. என்னல அர்த்தம்.

பார்வதி ஒரு நா மதுரையில இருந்து என்னையக் கூப்பிட்டுது. அங்கயற்கண்ணி அம்மையே என்னயக் கூப்பிட்ட மாறி இருந்துது. எப்பான்னு அழ ஆரம்பிச்சிட்டு, ஏழா எந்தாயி அழாதலன்னேண். இல்லேப்பா, அப்பாவுக்கு அண்ணன்மாரு ஒருத்தரும் கிட்னி குடுக்கல்லேன்னு அப்பா இங்கன திருப்பரங்குன்றம் வந்தவோ அழுதாக தாங்கல பெரியப்பா. இவோ ஒங்க மருமகன்..

யாரு தூத்துக்குடிக்காரனா. சொல்லும்மா.

அவாள் சொன்னா.. ஒம் கிட்னியக் குடுன்னாள்ளா. எனக்கு சந்தோஷமா இருந்திச்சு. நான் என்ன செய்யட்டும் சொல்லுங்க பெரியப்பா.

ஒம் வீட்டுக்காரனா, அவ அப்பா அம்மா அப்படி வளத்திருக்காக, அவங்க ரெண்டு பேரும் என்ன சொன்னாங்க..

எங்க மாமியாரு புள்ளைகளையும் வீட்டையும் நாம் பாத்துக்கிடுதேம். நீ ஆஸ்பத்திரியில் போயி ஆபரேஷன்ல்லாம் முடிச்சிட்டு வந்த பொறவும் நாம் பாத்துக்கிடுதேம். போயிட்டு வான்னு திருநாறு பூசி அனுப்பிச்சிட்டாங்கன்னா,

அது இந்தச் சொத்த வாங்கத்தான.

எம்மா நீ எதுக்கு வாய் விடுத. அவனுவ இருக்கானுவள்ளா. எல என்னல பொம்பளப்புள்ளய விட்டுப் பேச விடுதீய.

அவ கேட்டதில என்ன தப்பு பெரியப்பா.

யாரு கேக்கக் கூடாதுன்னு சொன்னா. கேக்க வகையே இல்லாதவங்க கேக்கது தப்பில்லா. எல இங்கன பீனல் கோடுல்லாம் கெடயாது மனுஷன்கோடுதாம் அது நேரா இருக்கும். தெரியுதால. நீங்க இப்படின்னு நல்லாத் தெரிஞ்சுதாம். ஒங்க அப்பம் எங்கிட்ட ஒரு நா ராத்திரி கடையயெல்லாம் பூட்டிட்டு வந்தாம். அண்ணாச்சி பார்வதி கிட்னியக் குடுக்கலேண்ண நாம் போன எடம் புல்லு மொளச்சிருக்கும் அண்ணாச்சி. அப்பம் ஒரு பயலுவளும் வராதது மட்டுமில்ல. ஆஸ்பத்திரிக்கும் வரலேல்லா அண்ணாச்சி. மத்த எல்லாத்துக்கும் வந்தானுவ. எப்படி இருக்கே. ஒடம்ப பாத்துக்க. செக் அப்புக்குப் போறியான்னு ஒரு வார்த்த கெம்பல அண்ணாச்சி. அதாம் நாம். ஒரு முடிவுக்கு வந்திருக்கேம்ன்னான்.

என்னடே சொல்லுண்ணேன்.

பார்வதி புள்ளைக்கும் அவ வாரிசுகளுக்கும் எம் சொத்தப் பூராம் எழுதி வெக்கப் போறேன்னான்.

எய்யா அதத்தாம் நானும் நெனச்சேம். கரெக்டாதாம் முடிவெடுத்திருக்க. புள்ளையார் புள்ளலால நீ. அவரு சரியாத்தாம் வழி காட்டிருக்காரு. செய்யுன்னு சொல்லி ஏம் வீட்ல வச்சுத்தாம் அந்தப் பத்திரம் அதாம்ல உயில் எழுதி வச்சோம்.

நாங்க கொள்ளி வச்சோம்லா.

யாருல இல்லேண்ணா. பெரியார் கோயிலுக்கு மொட்ட போடுதனுவளச் சொல்லுவாரு காத வெட்டச் சொன்னா வெட்டுவீயா. முடி வளந்திரும்ன்னு தெரிஞ்சுக்கிட்டுத் தான வெட்டுதீயன்னு. அந்தப் பெரிய மனுசன் சொன்னது. சரிதானடா. கிட்னியக் கொடுத்தா கிட்னி வளராதுன்னு தானல பெத்து ஆளாக்கின தகப்பனுக்குக் கொடுக்கல. கொள்ளி வச்சானுவளாம். அவனுக்குத்தாம் பத்து வருஷத்துக்கு முன்னரே உயிரோட கொள்ளி வச்சிட்டேளலே.

எல ஒண்ணு சொல்லுதேம் ஒம் தங்கச்சி என்ன பண்ணினா தெரியுமால. அந்தச் சொத்தப் பூராவும் பிள்ளையார் கோயிலுக்கு எழுதி வச்சு பிள்ளையார் கோயில் பெயரில ஒரு பொம்பளப் புள்ளைய பள்ளிக் கூடம் கட்ட ஏற்பாடு செஞ்சிட்டா. அரசாங்கத்திட்ட ஒங்க அப்பா பேருல பள்ளிக் கூடம் கட்ட விண்ணப்பம் போட்டிருக்காங்க.

நாம் கேட்டேன். எல ஒனக்கு வேண்டாமான்னு.

இல்ல பெரியப்பா ஒங்க மருமகன் சொன்னாங்க. அவோள இவ்வளவு பெரிய ஆளாக்கினது பிள்ளையார் தான. மூச்சு விடுத வர மாமா சொல்லிக்கிட்டிருந்தாக. அத ஒரு பள்ளிக்

கூடமா ஆக்கிருவோம். காலா காலத்துக்கும் ஒங்கப்பா பேரு நிக்கும்ன்னாக. அதாம் பெரியப்பா.

ஏழா நீ எங்க அம்மே மீனாட்சிதான் ஆத்தான்னேன்.

அய்யா பொறப்படுங்க. ஒங்க புள்ளைக இதல்லாம் கவனிச்சிட்டிருக்கானுவ. பாத்து நடந்துக்கிடுங்க.

வெறகு அடிச்ச கம்பு வெறகு மேலன்னு பெரியவங்க சொல்லிருக்காங்க. குடிகாரப் பய அம்பில்லாம் நமக்கு புத்தி சொல்ற மாரி ஆயிட்டுதேன்னு வேற அழாதீங்க.



அண்ணாச்சி நாம் சிவம்பிள்ளைலா வந்திருக்கேம்.

எல என்னா நாகர்கோவில்ல இருந்துக் கிட்டு இங்கன வாரியாவே. இப்பம் காலேல வந்து பேப்பர் படிக்க விடாம சிவம்பிள்ளை வந்திருக்கேம்ன்னா. ராத்திரி பத்து மணிக்கெல்லாம் வராதீங்ன்னாலும். கேட்டுத் தொலையுதேளா.

கோயிலுக்கு எப்பம் வேணாம்ல்லும் வரலாம்.

கோயிலுக்குப் போய் ரொம்ப நாளாச்சு என்னவே. அங்கனயும் டைம்தாம். தெரியுமாவே. திருப்பதி பெருமாளையே ஈமெயில்ல புக் பண்ணுதானுவவே. நீரு இதெல்லாம் தெரியாமத்தாம் வாழ்ந்துகிட்டிருக்கீரு. என்ன செய்ய அவங்க ரப்பர் தோட்டமும் கேரளாவுல வாங்கிப் போட்ட சொத்துக்களும்லா வே ஒம்ம எந்தக் கவலையும் இல்லாம வாழ வெச்சீருக்கு. சரி சொல்லும் சும்ம வர மாட்டிரு. சோழியன் குடுமி சும்மா ஆடாதும்பாங்கள்ளா.

ஒண்ணும் இல்ல இந்தப் பய சுகுமாறன் குடும்ப மரியாதை எல்லாத்தையும் காலி பண்ணிருவாம் போல இருக்கு.

ஒங்களுக்குத்தான கட்டுப்படுவாம். அதாம் வந்தேன்.

பயலுவளச் சரியா வளக்கறதில்ல. பொறவு ஒங்க பையம்ன்னு ஏன்கிட்ட வந்து நிக்கது. ஓர்மை இருக்காவே. நாம் ஏற்கனவே சொன்னேன். அந்தப் பயலுக்கு வயசாகிக் கிட்டிருக்கு. எல்லா மயிரும் நரைக்க வர அந்தப் பயல இப்படி விடாதீங்க. அவளும் ஒம்ம வீட்டுக்காரியும் நீரும் என்னிக்காவது நாம் சொல்லுததக் கேட்டேளாவே. இன்னிக்கு வந்து சுகுமாறன் சரியில்லேங்கீரு. என்னத்த சரியில்ல சொல்லும்.

இல்ல அண்ணாச்சி. நாங்களும் பொண்ணு தரம் பாத்துக்கிட்டுதாம் இருக்கோம் அண்ணாச்சி. ஒண்ணு இருந்தா ஒண்ணு இல்ல. ஓர்ம இருக்கதாம் செய்யுது.

எல்லாமே இருந்தா அது மனித வாழ்க்கை இல்லவே. கொஞ்சம் முன்னப் பின்ன இருக்கத்தாம் செய்யும். அதெல்லாம் விட்டுத் தள்ளிட்டு ஒரு தாலியக் கட்ட ஏற்பாடு பண்ணும்வே. முப்பத்தி அஞ்சு வயசாச்சு. அவம் ஒரு தப்புமலா பண்ணித் தொலைக்க மாட்டேங்காம். அப்படி பண்ணிட்டு இங்கன வந்து நின்னாம்ன்னா நாம். அந்தப் பயல ஆதரிச்சு கல்யாணத்த சூழ்நிலையை நீங்க ஏற்பாடு செஞ்சிட்டு, இப்ப வந்து வாயிலயும் வயித்திலேயும் அடிச்சிட்டீங்கண்ணா. ஒங்களுக்கு கண் இல்லேன்னு தெரிஞ்சுகிட்டாம். அதாம் ஒங்களுக்கு ஒங்கள் மாரியே கண் இல்லாதப் பொண்ணா பாத்திருக்காம். விட்டிராதீயும் நல்ல சந்தர்ப்பம். பொம்பளப் புள்ளதானவே. ஆம்பளப் பையலையா கட்டிக்கிடுதேம்காம். அந்தப் பிள்ளைக்கு என்ன வயசிருக்கும் வே.

அது அரக்கழுத வயசிருக்கும்.

அதான கேட்டேம். இவனுக்கு முக்காக் கழுத வயசாச்சுல்லாவே. அதுதான சரியா இருக்கும் போவே. போயி நடத்தி வையும். நானும் வாரேன். எத்தன நாள் காத்துக் கெடப்பாம்.



எல்லாரையும் வீட்டுக்குள்ள விடுதீய. ஆனா சில பேர விடவே மாட்டேங்களே ஏம் அண்ணாச்சி. இல்ல அண்ணாச்சி அந்தக் கல்யாணிப் பய அழுதாம் அண்ணாச்சி.

என்னல அழுதாம்

அவோதான் எனக்கு வழிகாட்டின்னு நெனக்கேம். என்னைய அண்ணாச்சிக்கு புடிக்கவே மாட்டேங்குது. ஏம்னே தெரிய மாட்டுங்கலன்னு பாக்கும் போதெல்லாம் ஒரே ஒப்பாரி.

பாத்தியால. தானாவே வார்த்த ஒம் வாயில் இருந்து விழுது பாத்தியா ஒப்பாரி. எந்த நல்ல காரியத்தையும் அந்தப் பய அப்படித்தாம் பேசுதாம். பேசாதல நல்லதே பேசுன்னா எத்தன வருஷமாச் சொல்லிப்பாத்தும் கேக்க மாட்டுக்காம். நான் என்ன பண்ண. எனக்கும் அந்தப் பழக்கம் வந்திரக் கூடாதுல்லால. நீ அந்தப் பயகிட்ட ரொம்ப பழக்கம் வெச்சுக்கிடாதல். ஒன்னையும் அவம் மாத்திருவாம்ல.

ஆமா அண்ணாச்சி எப்போதும் அப்படித்தாம் பேசுதாம்..

எல கல்லிடைக்குறிச்சியில் சோமுப் பய மகளுக்கு கலியாணம்ன்னு போயிருக்கேம். இந்த நாயி வந்தாம். என்

நேரம் என் பக்கத்து நாக்காலியில ஒக்காந்திட்டு, என்ன அண்ணாச்சி எல்லா எழவு வீட்டுக்கும் முன்னாலய வந்திருதேளேங்காம். தாலி கட்டுதது எப்பம்ன்னு அவம் எப்படி கேக்காம் தெரியுமால. எழவு தாலிய எப்பம் அறுப்பானுவங்காம். எல எங்கன என்ன பேசணும்ன்னு தெரியாம இருக்காம்ன்னு நெனைக்கல. இது இந்தப் பயலுக்கு ஒரு நோயாத் தாம் இருக்கு.

நம்ம ஊருல மனதத்துவ டாக்டர் ஒருக்க சொன்னாரு. இந்த ஊர்ல பாதிப் பய எங்கிட்ட வரணும். அது தெரியாமயே வாழ்ந்திக்கிட்டு இருக்கானுவன்னார். எல கலியாணா வீட்டில் எவன் காதுலயாவது இது விழுந்திட்டா. இவம் கதி என்னாகும்.

எல சாமிக்கும் அம்பாளுக்கும் தினசரி தாமிரபரணி யிலேயிருந்து வெள்ளிக் குடத்தில் தண்ணி எடுத்துக்கிட்டு வாங்கா. நாகசுரம் சங்கு சேகண்டி யானைல்லாம் போகும்ல்லால். அத இவம் எங்கிட்ட சொல்லுதாம்ல அம்மைக்கும் அப்பனுக்கும் நீர்மால எடுத்திட்டுப் போறானுவன்னு. பொறவு எப்படி இந்தப் பயல வீட்டுக்குள்ள விடுதது சொல்லுல.

ஆமாண்ணாச்சி பொருக்காட்சிக்குப் போனோம். எப்படியோ இந்தப் பய வந்து ஒட்டிக்கிட்டாம். எல்லாச் செலவும் சிமெண்ட் கடப் பிள்ளை மகன் சிவராமன்தாம். அவம் நாங்கள்ளாம் ஜெயண்ட் வீலில ஏறினோம். இவம் பயந்தாம் வால்லேன்னுட்டாம். கீழே இறங்கி வந்த ஒடனே சிவராமம் கிட்டச் சொல்லுதாம். வீல் கீழ விழுந்திருந்தா ஒங்க அப்பாவுக்கு நீ ஒரே பிள்ளை., காரு வண்டியெல்லாம் அப்புறம் ஒங்க சித்தப்பா. பிள்ளைகள தான் அனுபவிப்பானுவங்காம். பொறவு சிவராமன் ஒரு மாரியா ஆயிட்டாம். வெளிய வந்திட்டோம் அண்ணாச்சி. அத மாரி சிவராமன் கலியாண வீட்டில் அந்தப் பிள்ள அழகப் பாத்து, இந்த கருவாச்சி பயலுக்கெல்லாம் இப்படி அழகான புள்ளைகளா வாச்சிருது.

நமக்கெல்லாம் பாத்தியால. இந்த மாரி புள்ளைகள்ளாம் சீக்கிரம் தாலி அறுத்திருவாளுவங்காம் அண்ணாச்சி.

அதாம்ல நானு எவ்வளவோ சொல்லிப் பாத்தேம். பொறவு. இவன என்ன செய்ய. நல்ல பயலாத்தாம் இருக்காம். இது எங்கன இருந்து இவங்கிட்ட வந்திச்சுன்னு தெரியலயே.

அண்ணாச்சி.

என்னல போன்ல கூப்பிடுத, பவுசு கூடிப்போச்சோ.

அங்கன வரக் கூடாதுன்னுட்டேளா. அதாம்

சரி சொல்லு.

என்ன எழவச் சொல்ல. என்னோடு ரெண்டாவது மக இருக்கால்லா அண்ணாச்சி.

எல பி.ஏ.படிச்சாளே அவளா.

நீங்கதான் அண்ணாச்சி சீட் வாங்கிக் குடுத்தீய. அவள அவ அண்ணன் மகனுக்கு தாலி அறுக்கணும்ன்னு புளியரக்காரி நெலயா நிக்கா. நீங்க வந்தாத்தான் என் வீட்டுல எந்த எழவுன்னாலும் நடக்கணும்ன்னு வேற சொல்லுதா. நாம் வீட்டுக்கு வரட்டா. ஓங்க வாயினால் பேதில போவானேன்னு கூப்பிட்டு எவ்வளவு நாளாச்சு.

அண்ணாச்சி இந்தக் குத்தாலம் இருக்கான்ல்லா.

ஆமல அய்யர என்ன விஷயம் அவனைப் பத்திப் பேசுத.

அவனையும் வீட்டுக்கு வரக் கூடாதுன்னு சொல்லிட்டீயன்னு வருத்தப்பட்டான்.

எல அது நீ கேரளாவுக்கு நம்ம வாத்தியார் கல்யாணத்துக்குப் போயிருந்தேல்லா. அப்ப நடந்த கூத்துல்லா. அவன நிக்கவச்சு உரிச்சிருக்கணும்டா. சரி அவ அம்மைக்காக விட்டேன்.

என்ன அண்ணாச்சி.

இந்தப் பய காலேல நம்ம வீட்டு வாசல்லயே நிக்காம்ன்னுல்லாம் சொன்னேங்கலால.

ஆமா அண்ணாச்சி,

எல நீ கூடச் சொன்னீல்லால. இவன பேசாம நம்ம வீட்டு வாச்மேனா போட்டிரலாம் அண்ணாச்சின்னு. பொறவு கிண்டலடிச்சீய. அது பார்ட் டைமாத் தான் இருப்பாம் போல இருக்குன்னு. காலைல எட்டரை லயிருந்து ஒம்பது வரைக்குன்னு.

ஆம அண்ணாச்சி. அதுக்குக் கூட. அவ அம்மேல்லாம் ஒங்க அம்மைக்கு ரொம்பத் தொண்டூழியம் பாத்தவன்னு சொன்னீங்களே அண்ணாச்சி.

எல கத எவனுக்கும் புரியல்ல. நம்ம சந்தனக் கடை அய்யரு ஒரு நா காலேல வந்ததுக்கப்புரம்தாம்ல தெரிஞ்சுது.

என்ன அண்ணாச்சி.

எல அவர் மக காலேஜில படிக்குல்லா. அதுட்ட நம்ம வீட்டுப் பையம்ன்னு சொல்லி அந்தப் புள்ளய சங்கடப்படுத்திருக்காம். அய்யரு அய்யாவுக்கு ரெண்டு பையங்கதான. அவனுவ அப்படிப்பட்ட பிள்ளைகள் இல்லையேன்னு நெனச்சுக்கிட்டு நம்ம பூசாரிப் பிள்ளைட்ட கேட்டிருக்காரு. அவரு அவம் செல்லத்தாயி மகம்லா. அவுக வீட்டுல அவங்க அம்மெ ரொம்ப நாளா அந்தம்மாவுக்கு ஒதவியா இருந்தவ. அதனால தான் அந்த நடைக்கு வருவான். என்ன விஷயம்ன்னு கேட்டிருக்காம். அவங்கிட்ட சொன்னா லோக்கல் சேனலவிடச் சீக்கிரம் செய்தி பரவிரும்ன்னு அய்யருக்குத் தெரியும்லா. அதாம் நேர அய்யாகிட்டய சொல்லணும்ன்னு வந்தேம்ன்னாரு. நம்ம வீட்டு வாசலில நின்னுக்கிட்டு.

இதுதான் எங்க வீடுன்னு அதுகிட்ட பீத்திருக்காம்.

அதுக்குப் பொறவுதான் சோத்துக்கு வழியில்ல. படிக்கவும் இல்ல. ஏல அந்தப் பிள்ளைய வச்சுக் காப்பாத்த வழியிருக்கால. சொல்லுன்னு கேட்டேன். மண்ணா நிக்காம். வெளிய தெருவில்

தெரிஞ்சா அந்தப் புள்ள வாழ்க்கைல்லா கெட்டுப் போயிரும் அவம் அம்மையை கூப்பிட்டு விட்டேன். ஒன்னு அழுதா. இனிமேக்கொண்டு இந்தப் பக்கம் வரக்கூடாதுண்ணேனா. வீட்டில் போயி வாரியலால அடிச்சிருக்கா. அதாம் இங்கன வர மாட்டான்.

அய்யரு பிள்ளதாம் இந்தப் பயலுக்குக் கெடச்சுதா.

எல விடு. நீ போயி எந்தச் சிரையையும் இழுத்திட்டு வந்திராத, சரியால. சாப்பிட்டிட்டியா.

அதுல்லாம் ரூல்ஸ் ரேட்ல்லாம் கரக்டா நடந்திரும்ல்லா அண்ணாச்சி.

ஒரு பெரிய கூத்துல்லா கேரளான்னவுடனே நம்ம பையனுவல்லாம் வாத்தியாருக்கு அடிச்ச லக்கப் பாத்தியான்னு போனோம்ல அவரு பேசாம அவங்க அத்த பொண்ணையக் கட்டிருக்கலாம்ன்னு. அங்கனப் போயிப் பாத்ததுக்கு அப்புறம்தான் தெரிஞ்சுது. கேரளாவிலயும் அழகே இல்லாத பொம்பளப் புள்ளைய இருக்கும்ன்னு. வாத்தியார் எங்க அண்ணன் சொக்கலிங்கம் சதி பண்ணிட்டாம்ன்னு புலம்பிக்கிட்டே இருந்தாரு. நாங்க கலியாணத்த நிறுத்திரலாம்ன்னு நெனச்சா. அந்தப் பிள்ளையோட தாய் மாமன் அங்கன எஸ்.பியா இருக்காருன்னு தெரிஞ்சுது மூடிக்கிட்டு வந்திட்டோம்.



வேய் கிட்டுப் பிள்ளை வாரும் என்னா காலேல

அப்பந்தான அண்ணாச்சி மனசு கொஞ்சம் லேசாகுது. அதாம்.

ஒமக்கு மனசு லேசாக விட மட்டாங்களே ஒம்ம ஒடம் பொறப்புகள்.

அதத்தாம் அண்ணாச்சி சொல்ல வந்தேம்.

என்ன தும்பம். சொல்லித் தொலையும்.

எம் பெரிய புள்ள சொல்லுவாம். அவங்க எத்தன அசிங்கப்படுத்தினாலும் அப்பா அவாள் அக்காளோ அண்ணனோ கூப்பிட்டா ஒடனே ஒடிருவாள்ளான்னு.

அந்தக் கூத்து தான்.

என்னமோ எங்க அக்காள பாக்கணும்ன்னு ஆச. போன் பண்ணினேம். அவாள் அத்தாம் தாம் எடுத்தா. வாயேன்னா. சந்தோஷமா ஆயிட்டு. அதாம் பத்து மணிக்குப் புறப்பட்டுப் போனேன் அண்ணாசி. பண்டம் பழம் எல்லாம் வாங்கிக்கிட்டு.

யார் வீட்டுக்கு நீரு போனாலும் அதான வழக்கம்.

மணியை அடிச்சேன் வான்னாங்களா. உள்ள போனேன். அவாள் மட்டுந்தான் இருந்தா. அக்காவ எங்கேண்ணேன்.

அவ ஒம் மூஞ்சில முழிக்க மாட்டேம்ன்னுட்டு ஏந்தம்பி வீட்டுக்குப் போயிட்டான்னா. அதச் சொல்லியிருந்தா நாம் அங்கன போயிருக்க மாட்டேம்ல்லா. நம்ம ஒண்ணும் பேசக் கூடாதுன்னு கட்டுப்பாட்டோட இருந்துகிட்டேம். ஒங்கக்கிட்ட குறள் கேட்டு கேட்டு நாம் பக்குவப் பட்டிட்டேம்ல்லா.

வே அவம் ஒன்ய அசிங்கப்படுத்தான கூப்பிட்டிருக்காம் பொறவு எப்படி சொல்லுவாம். அவனுக்குப் பேரு நல்லசிவம்.

அவர் பாட்டுக்கு அடுக்குதாரு. நீ கொண்டு வந்த பொருளையெல்லாம் கொண்டு போன்னுட்டாரு. வர்ற வழியில் கிறிஸ்தவ அனாதைப் பள்ளிக் கூட்டதில் கொடுத்திட்டு வந்திட்டேம் அண்ணாச்சி.

அதுதாம் மாசம் தோறும் குடுப்பீரே.

ஒம்மபெரிய பய சொன்னதுதான சரி. அப்பம் இவம் புள்ளைகள் ஒம்ம வீட்டில விட்டு வளத்தானே. அப்பம் தின்னதுல்லாம் பீயாவே.

இல்லேண்ணாச்சி. அவரு சொல்லுதாரு. எம்பொண்டாட்டி இறந்த வீட்டில் அவ பொம்பளப் புள்ளைகள் நாம் ஏதோ சொல்லிட்டேம்ன்னு எங்க அக்கா வருத்தத்தில் என்னப் பாக்க மாட்டேன்னாளாம்.

ஏய் ஒனக்கு இந்தச் சொந்த பந்தமெல்லாம் தெரிஞ்சிருந்தும் நீ போகலாமாடே அந்த ஆளு பேருக்கும் அவனுக்கும் சம்பந்தமே கிடையாதுன்னுதான் ஒலகத்துகே தெரியும்லாவே. நல்லசிவம் அவம் பேரு. அவன் அய்யால்லாம் பெரிய மனுசன். இவன் ஒங்க அக்கா இல்லன்னு சொன்னாடனே

நீரு பொறப்பட்டு வந்திர வேண்டியது தான. அவம் பாட்டுக்கு அவ்வளவு தூரம் பேசியிருக்காம். நீரு கேட்டுக் கிட்டிருந்திருக்கேரு.

இல்ல அண்ணாச்சி இவங்க குடும்பத்துக்கும் இவங்க பிள்ளைகளுக்கும் என்னவெல்லாம் செஞ்சு வச்சேன் அண்ணாச்சி.

அதையெல்லாம் மறந்திரணும்ன்னு நாம் எத்தன தடவ சொல்லியிருக்கேம்வே

அந்த பெரிய பிள்ளை கல்யாணம் மட்டுமில்ல அண்ணாச்சி. அதுக்குப் பொறவு தினம் புருஷனும் பொண்டாட்டியும் சாயங்காலம் வீட்டுக்கு வந்திரும். நம்ம சுப்பய்யம் கடேல இருந்துதாம் பண்டம் பலகாரம் வாங்கி வச்சுக் கொடுப்பா. அவ கொழுந்த உண்டாகியிருக்காளேன்னு. என்ன வெல்லாம் வாங்கி வாங்கி வெப்பா தெரியுமா அண்ணாச்சி.

ஒம் வீட்டுக்காரியப் பத்தி நீ சொல்லித்தாம் நாங்கள்ளாம் தெரிஞ்சுக் கிடணுமா வே. அத்தன நல்ல பிள்ளைக்கு அந்த நோயக் கொடுத்திட்டாளே காந்திமதி.

அப்ப கூட திருவனந்தபுரத்தில் காட்டப் போறேன்னு எங்க அக்காவக் கூப்பிட்டேம். எனக்கு என் பேரப் புள்ளைகளைப் பாக்கணும்ன்னா வரல்லே. அன்னிக்கு ராவன்னாவும் அவரு வீட்டுக்காரியும் இல்லேண்ணா நான் அசிங்கப்பட்டுப் போயிருப்பேம் அண்ணாச்சி.

இராவன்னா சொல்லுவாருயோ இவங்க வரும்போதெல்லாம் நீங்க பண்ணுற செலவுல்லாம் எவ்வளவுன்னு நீங்க கணக்குப் பாத்தேள்ன்னா தெரியும் ஒங்களுக்கு. ஊரெல்லாம் ஒங்கள புத்திசாலின்னு சொல்லுது. நாம் ஒத்துக்கிடுதன். ஆனா ஒங்க அக்கா மாப்பிள்ளலாம் பெரிய பிராடுய்யா. ஒங்க துட்டிலய பிள்ளைகள ஒங்க வீட்டுல

கொண்டு படிக்க வெச்ச யோக்கியம் பார். ஒங்களுக்கு ஒரு வெஷயம் தெரியுமா, ஒங்க பெரியவரு அதாம் மூத்த மகன் ஒரு நா காலேஜ்கிட்ட அத்த வீடு இருக்கேன்னு போயிருக்காம். அந்தத் துப்புக் கெட்ட மனுசம் எங்க வந்தேன்னு கேட்டிருக்காம். அவோ தாம் அந்த மகராசிதாம் ஒங்க்கிட்ட சொல்லக் கூடாதுன்னு சொல்லிட்டாவோ.

அவ இப்படி எத்தன விஷயத்த ஒமக்குத் தெரியக் கூடாதுன்னு பொத்தி பொத்தி வச்சிருக்கா தெரியுமா. ராமையா இங்கன வரும்போதெல்லாம் சொல்லுவாம். அவம் வேற போயிட்டானவே. அவம் இருந்தா அங்கன அந்த துப்புக் கெட்டவம் வீட்டுக்கு ஒன்னயப் போக விட்டிருப்பானாவே.

அவ போன வீட்டுக்குள்ள அவ பெரிய மக வந்து தூரத்திலயே ஒக்காந்திருந்தா அண்ணாச்சி. புத்து நோய் தொத்து நோயாண்ணாச்சி. எனக்குத் தாங்க முடியல்ல சொன்னேம். நானும் அவளும் அவ சின்னப் புள்ளைய எங்க புள்ள மாரித்தாம் அண்ணாச்சி பாத்தோம். அந்தப் புள்ள முத நாளே வாரேம்ன்னிருக்கு. வேணாம்ன்னு அவரும் எங்க அக்காளும் சொல்லித்தடுத்திருக்காங்க., இதையெல்லாம் கேட்டா அவ புள்ளைகளப் பேசிட்டேம்ங்காளாம்.

ஏய் இப்பவாவது ஒம் பெரிய புள்ளபேச்ச கேளுவே.

இதுகள்ளாம் வெளங்காததுவன்னு நல்லாத் தெரிஞ்ச பொறவும் அவளப் போயி பாக்கணும்ன்னு போயிருக்கேரே. இராமைய்யா சொன்னதுதான சரி அவ சொன்ன மாதிரிதான அவ பேரப்புள்ளைகளப் பாத்துக்கிட்டே இருக்கால்லா. காந்திமதி இருக்காவே.

ஒம்ம சுமைய இறக்கி வச்சிட்டிரு. அண்ணாச்சி எத்தன நா தூக்கம் இல்லாம ஒம்மயே நெனச்சிட்டிருக்கப் போறேனோ.

என்னவே கிட்டுப் பிள்ளை நேத்தும் ஒரு நல்ல காரியம் பண்ணிருக்கீரு போல.

அதுக்குள்ள எப்படி அண்ணாச்சி தெரிஞ்சிட்டுது.

அதாம் ஒங்க காரு அங்க இங்க பறந்துக்கிட்டிருந்த ஒடனே அண்ணாச்சி ஏய் அம்பி என்னல கிட்டுப்பிள்ளை கார் அங்கனயும்யும் இங்கனயும்யும் போயிட்டிருக்குன்னு கேட்டாகள்ளா. அப்புறம் நான் ஒங்க டிரைவர் நாயுடுட்ட கேட்டெம், ஒருத்தர்ட்டயும் சொல்லாதவேன்னு சொல்லி யிருந்தேன். சொல்லிட்டானா.

வேய் எனக்குத் தெரியக்கூடாதுன்னு நெனைக்கீரோ,

இல்ல அண்ணாச்சி நாம் நேர்ல வந்து சொல்லணும்ன்னு நெனசுக்கிட்டு இருந்தேம்.

சரி சரி. யாருவே புள்ளைக ரெண்டும்.

அண்ணாச்சி புதுசா வாங்கின வண்டிக்கு ஒரு டிரைவர் வேணும்ன்னு நம்ம சாகுல் பாய்ட்ட கேட்டிருந்தேன். முதல்ல கொஞ்சநாள் ஓட ஒரு பையன அனுப்புதேம், அத்தா பொறவு நிரந்தரமா ஒருத்தன அனுப்புதேம்ன்னார். ஆனா அந்தப் பயல எனக்குப் புடிச்சிக்கிட்டு. நானும் தம்பி நல்லையாவும் செங்கோட்டை வரப் போயிட்டு வந்தோம். நல்லையா தம்பிதாம் அவங்கிட்ட கேட்டாரு, கிட்டுப் பிள்ள தம்பிகிட்டய கார் ஓட்டுதியான்ன்னு. ஓடனெ சரின்னுட்டான்.

ரெண்டு நா பிள்ளைகள் மெட்ராசில இருந்து வந்துதுல்லா. அவங்களக் கூட்டிட்டு பாபநாசம் மணிமுத்தாறுன்னு போனோம். மறுநா காலையில் 9 மணிக்கு வந்த இவன போயி ஒரு ஷேவிங் கிரீம் வாங்கிட்டு வான்னு அனுப்பிச்சேம். அவன் ஓல்ட் ஸ்பைசா யார்ட்லியா அய்யான்னு கேட்டாம்.

புரிஞ்சிக்கிட்டேம். பய பெரிய வீட்டுப் பயலாத்தான் இருப்பாம்ன்னு அதுக்குப் பொறவுதாம் ஊரு எதுப்பாண்ணேன். வேலூருன்னான். ஏய் வசதியான வீட்டுப் பிள்ளலா போல

நீண்ணேன். பொறவு வாயத் தொறந்தாம். அவங்க அய்யா தோட்டத்துல நூறு பேர் வேல செய்தாம்ங்காம். அங்கன வேல பாக்குறவங்க மக ஒண்ணு காலேஜில படிச்சிருக்கு அதுக்கும் இவனுக்கும் பழக்கம் ஏற்பட்டிருக்கு. அவளக் கூட்டிட்டு இங்கன வந்து கார் ஒட்டிக்கிட்டு இருந்திருக்காம். பசியும் பட்டினியுமா.

அந்தப் புள்ளயக் கூட்டிட்டு வரச் சொன்னேன். பிள்ள அம்சமா இருக்கா. இவம் ஏதோ ப்ளமோ படிச்சிருக்காம். அது இங்கிலீஷ் லிட்டரேச்சர் படிச்சிருக்கு. நல்ல வேள சர்ட்டிபிகேட்லாம் வச்சிருந்தாங்க. கேரளாவில நம்ம ஹூசைன் பாய் கிட்ட கேட்டேம். முதல்ல அவங்கள ஊருக்குந்தாம் அண்ணாச்சி போகச் சொன்னேன். பொறவுதாம் தெரிஞ்சுது அந்தப்பிள்ள உண்டகியிருக்குன்னு.

அதெல்லாம் பாயி கிட்டச் சொன்னேன். விடுங்க அத்தா நாம் ஏம் புள்ளைகளா பாத்துக்கிடுதேன்னாரு. அனுப்புறதுக்கு முன்னால கலியாணம் செஞ்சு வச்சிரலாம்ன்னுதான் சாலைக்குமாரசாமி கோயில்ல வச்சுத்தான் கலியாணம் பண்ணினேன். பொறவு ரிஜிஸ்டிரார் ஆபீஸ்லயும் ரிஜிஸ்டர் பண்ணிட்டேம்.

கோயில்லய ரிஜிஸ்டர் பண்ணிருவாங்கள்ளா. பொறவு என்னத்துக்கு ரிஜிஸ்டர் ஆபீஸ்.

இல்லண்ணாச்சி பய பணக்காரனா இருக்காம். அவங்க குடும்பம் பணத்த வச்சு இந்தப் பிள்ளைகள பிரிச்சிருக் கூடாதுல்லா. அண்ணாச்சி. பாயி சொன்னாரு பிரசவம்லாம் கேரளாவிலய பாத்து அனுப்பி வைக்கேம்ன்னாரு. அதுக்கு உள்ள வாய்ப்பு கெடைக்கும்போது அவங்க குடும்பத்திட்ட பேசி அதுகள அவங்கள்ட்ட அனுப்பி வெக்கணும். அத நீங்கதாம் செய்யணும்.

நாம் பாத்துக்கிடுதேம் வே. வேலூர்ல இல்லாத ஆளா.

யத்தான் நாம் கற்பகம்ல்லா பேசுதேன்.

ஏழா என்ன.. அத்தான போன்ல கூப்பிடுத.

இல்ல.. ஒங்கள வந்து பாக்கணும் அதாம்.

இது என்ன கேள்வி ஓம் வீட்டுக்கு வாரதுக்கு கேக்கணுமா. அத்தான அசிங்கப்படுத்துதியோ டே.

இல்ல திடீர் தீடிர்ன்னு உலகம் சுத்தப் போயிருதேள்ளா. அதாம் கேட்டுக் கிட்டு வரலாம்ன்னு கூப்பிட்டேன் .

எப்பம் வேணாலும் வா ழா.

ஒரு பத்து மணிக்கு வாரேன்.

சரி சரி வா. நாம் இங்கன வீட்டுவதான் இருப்பேம். ஒங்க அக்காட்ட உலகம் சுத்தும் வாலிபன் இருக்காவளான்னு அன்னிக்குக் கேட்டிருக்க.

யாத்தாடி அக்கா அத ஒங்கட்ட பொட்டணம் கட்டி வச்சு சொலிட்டாளாக்கும்.

பொறவு அவளுக்கு நீ என்னய வாலிபம்ன்னு சொன்னா அதப் பீத்திக்கிட மாட்டாளால்.

சரி சரி நான் வாரேம் அத்தாம். முறுக்குச் சுத்திருக்கேம். கொண்டு கிட்டு வாரேம்.

ஏட்டி லஞ்சம் வேற, கொண்டு வாரியா.

எய்யா எனக்கு ஒங்ககிட்ட பேச ஆவியில்ல போனை வெக்கேம்.

சரி சரி வந்திரு. ஒனக்காக ஒக்காந்திருப்பேம்.

•

வாழா வா. முறுக்கையெல்லாம் ஒங்க அக்கா கிட்ட கொண்டு குடுத்திட்டு வா.

சரி சரி

எல எத்தன தடவ சொல்லுதேம் கீழ ஒக்காராத. மேல ஒக்காருன்னு.

அது உலகத்தில இருக்கவங்களுக்குச் சொல்லுங்க. எங்கள ஒங்க அத்தையும் மாமாவும் இப்படிச் சொல்லி வளத்திருக்காகள்ளா. எப்படி பளிச்சின்னு ஒங்களுக்கு எதிர்ல நாக்காலில ஒக்கார முடியும். பொறவு வல்லநாட்டுக்காரிய ஊரு சொன்ன மாரிதான என்னயும் சொல்லும்.

ஏய் அது அப்படித்தான் சின்னப் புள்ள கணக்கா எங்கன வந்தாலும் அப்படித்தாம் ஒக்காரும். அது ஊரு பூராம் பரவிடுச்சா.

ஒண்ணும் பரவல. அவளே அத ஒரு பெருமையாச் சொல்லிக்கிட்டு அலஞ்சா. பெரிய வீட்டு அண்ணாச்சி கூட நாம் சேர்ல ஒக்காந்துதாம் பேசினேம்ன்னு. அவோ ஒண்ணும் சொல்லல. நாக்காலில ஒக்காருலன்னுதாம் சொன்னா. ஊருல

இருக்கணுவல்லாம் தப்பு செஞ்சவனுவ அவனுவளா பயந்து கிட்டு கீழ ஒக்காருதானுவ. நாம் என்ன தப்பு செஞ்சிருக்கேம். அதாம் ஜோரா ஒக்காந்து பேசிட்டு வந்தேம்.

எட்டி ஒம் வீட்டுக்காரம் ஒக்காருவானான்னு எங்க அம்மே கேட்டா. நாம் ஒண்ணும் பதில் சொல்லலேன்னு எங்கிட்ட கூட சொன்னா அத்தாம்.

சரி நீங்க என்ன வெஷயமா அத்தானப் பாக்க வந்தீங்க.

இப்படி கேலி பண்ணினீங்கன்னா இனி இங்கன வாசப்படிய மிதிக்க மாட்டேம். என்ன நீங்க நாங்கன்னு பேசுதீயோ.

சரிடே என்னா ஒம் புருஷன் காலேஜ்ல பாடம் சொல்லிக் குடுக்க வாத்தியானாச்ச அவம் பொண்டாட்டிய மரியாதயா கூப்பிடுவோமேன்னு தாம்ல கூப்பிட்டேம். எங்கம்மேல்லா கோபப் படாத.

அந்த காலேஜ் எழவப் பத்தித் தான் பேச வந்திருக்கேம்.

எட்டி காலேஜப் போயி எழவுங்க.

எய்யா ஒங்க தம்பியாபிள்ள அங்கன வேல பாக்காவள்ளா. அப்பம் அத எழுவுங்கதாலத் தாம் சொன்னேன்.

ஏட்டி அவம் எப்பேர்ப்பட்ட ஆளு. இங்கனக்குள்ள எனக்கு தமிழ் தொடர்புடைய எந்த வேலைக்கும் அவந்தான ஒதவிக் கிட்டுக் கெடக்காம். அவம் மேல ஏதோ பழி சொல்ல வந்திருக்கியோ.

ஒங்க தம்பிய பத்தி வாயவே தொறக்கல அதுக்குள்ள பழி கிழிங்கேளே. ஒ.. முன்னக் கூட்டி தம்பிக்கார ஆளு அண்ணங்கிட்ட எல்லாத்தயும் செப்பியாச்சோ.

ஏட்டி அவனப் பாத்து எத்தன நாளாச்சும்மா. அவனுக்கு பல்கலைக்கழகத்தில் பணிச்சும அதிகம்ன்னு சொன்னான். ஒண்ணாந்தேதிக்குப் பின்னாலதாம் வந்து பாக்க முடியும்ன்னு

சொலிட்டாம். நானே அவனப் பாக்க முடியலயேன்னு தவிச்சுக்கிட்டு கெடக்கேம். நீ எம்மேலய பழி நீலம் பத்தவைக்கியே. ஒன்னய எல்லாம் என்ன செய்யலாம்.

ஆம அவாளுக்கு அண்ணம்தான. ஒங்க கிட்ட நியாயம் கெடைக்கும்ன்னுதான வந்திருக்கேம்.

ஏட்டி சொல்லு. ரொம்ப அளக்காத.

ஒங்க தம்பியோட கூத்து தாங்கல அத்தாம்.

என்னட்டி சொல்லு. பெரிய அஸ்திவாரம்ல்லாம் போடுத.

எய்யா அவாள் காலேஜில கிளாஸ் எடுக்கட்டும். யாரு வேண்டாங்கா. வீட்டுலயும் அந்தக் கூத்த வச்சுக்கிட்டா சங்கடமா இருக்காதா.

என்னட்டி சொல்லு.

ஒரே பொம்பளப்புள்ளய கூட்டம். அக்கம் பக்கம் இருக்கறவளுவ பேசுதாள்ளா. காது குடுத்துக் கேக்க முடியல. அதாம் ஒங்கள விட்டா அவாள்ட்ட வேற யாரு பேச முடியும்.

எம்மா அந்த பய எம்.ஏ. படிக்க பிள்ளைகள்ளாம் முனைவர் பட்டம் வாங்க படிக்கற புள்ளைகளுக்கு வழி காட்டுதவம். அதுக வீட்டுக்கு வரத்தாம் செய்யும்டா. அதிலயும் இந்தப் பய ஒரே கண்டிப்பா வேற இருக்காம்லா அதனாலத்தாம் இவனக் கண்டு காலேஜ பயப்படும். தெளிவு பண்ணிக்கிட அவங்கிட்ட வரத்தாம் செய்யும் நீ எங்க அம்மேல்லா. அந்தப் பய கிட்ட பேசி எதும் அசிங்கப்படுத்தலயே. செத்திருவாம்டா.

இல்லத்தாம். அப்படில்லாம் செய்வேனா. ஒங்ககிட்ட வந்தாதாத்தாம் தெளிவா ஆகிரும்ன்னுதாம் இங்கன வந்தேம்.

பக்கத்து வீட்டுக்காரியப் பத்தி ஒனக்குத் தெரியாதா. இவம்கிட்ட பல தடவ பல்லிளிச்சிருக்கா. பய பளிச்சின்னு இருக்கானா. என்னல்லாம் பேசிருக்கா தெரியுமா. இந்தக்

கறுப்பிய விட எங்கிட்ட என்ன இல்லன்னு. இந்தப் பய அவதாம் எனக்கு சரின்னு சொல்லிருக்காம். எங்க அப்பன் சிவன் சிவப்புத்தாம். அவம் எங்க அம்மை பார்வதி கருப்பு அவளத்தான கட்டிக் கிட்டாம். ஏம் வீட்டுக்காரியும் உமையம்ம மாரித்தாம்ன்னு சொல்லிருக்காம்.

இத ஒங்ககிட்ட சொன்ன தம்பி ஏங்கிட்டச் சொல்லலய.

நீ அவ கிட்ட சண்ட போட்டுட்டா அந்தப் புள்ள அசிங்கப்பட்டிரும்லாடே. நாந்தாம் அவம் கிட்ட கற்பகத்துக் கிட்ட இந்த விஷயத்தக் கெம்பிராதலன்னு சொன்னோம். சரிதானடே.

சரி அத்தாம்.

இதுக்குத்தாம் முறுக்கை லஞ்சமாக் கொண்டு வந்தீயாக்கும்.

லஞ்சம் வாங்குத மூஞ்சியப் பாருங்களேம். காந்தி படத்தையும் காமராஜ் படத்தையும் தல மாட்டில வச்சிருக்கற நீங்களா அத்தாம் லஞ்சம் வாங்குவியோ. நாம் வரட்டா அத்தாம்.

அந்தப் பயட்ட ஒண்ணும் கெம்பிராத. அந்த பக்கத்து வீட்டுப் புள்ள கிட்டயும் ஒண்ணும் பேசிரப்படாது என்னா.

எத்தாம் இங்கன வரத இதுக்குத்தான இங்கனயே வாரோம். நாம் ஒங்க கொழுந்தியா. அப்படில்லாம் நடக்க மாட்டேம்.

எங்க அம்மேல்லா. சொகமா இரி.

ஏம் அண்ணாச்சி கிட்டுப் பிள்ளைக்கு மட்டும் உறவு ஒண்ணும் உண்மையாயில்ல.

அதுல அந்தப் பயலுக்கு ஒரு வருத்தமும் இல்லடெ. அதாம் அவங்கிட்ட சிறப்பு. எல கூடப் பொறந்தவங்க எல்லாரும் அவங்கிட்டதான் தங்க காரியத்தையும் பாத்துக்கிட்டாங்க. ஆனா அவம் தனியாளா அவள இழந்திட்டு நின்னானே. அப்பங்கூட ஒருத்தரு வரல்லலா.

அவம் பிள்ள கலியாணத்துக்கு ஒருத்தரும் வரல்ல. அவம் நல்ல புத்திக்கு தங்கமான மருமகப்பிள்ளை வந்தா. அவ எப்படிக் குடும்பம்.

இல்ல அண்ணாச்சி இவருதாம் கூப்பிடலன்னு அவங்க அக்கா சொன்னாங்கள அண்ணாச்சி.

அந்தச் சண்டாளியக் கூப்பிடாதன்னு நாந்தாமல் சொன்னேம். அவ வந்தா கல்யாண வீட்ட அலங்கோலம் ஆக்கிருவால். அவ பயலுவ ரெண்டு பேரும் குடிகாரப் பயலுவ.

ஒரு தாலி சீல கட்ட முடியலங்கற வயித்தெரிச்சல், அதாம்ல காரணம்.

அவாள் இன்னொரு அக்கா.

எல அவ வீட்டுக்குத்தாம் செத்துப் போன கிட்டுப்பிள்ளை வீட்டுக்காரி தொண்டூழியம் பாத்தா. அவ வீட்டை அடைச்சுப் போட்டிருக்க போது, வாரா வாரம் முழு வீட்டையும் கழுவி விடறது சுத்தம் பண்ணிறதுன்னு அந்தப் பிள்ள தங்கம்லா.

அதையெல்லாம் மனசில வெச்சுக்கிட்டுத்தான் அக்கா கிட்ட போயி அவள சிகிச்சைக்குக் கூட்டிட்டுப் போகும் போது, அவ கூட வருவான்னு இந்த லூசுப் பய போனான். வேண்டாம்ன்னு சொன்னேம். அவம் கேட்டாக் கூட அந்தப் பிள்ள மதினி வருவான்னு நெனச்சுது. அவ என் பேரப் புள்ளைகளப் பாக்கணும்ன்னு சொன்னது மட்டுமில்லல. இப்பம் பேரப் புள்ளகளத்தாம் பாத்துக்கிட்டு கெடக்கா. இந்த வயசிலயும் செய்த நன்றிய மறந்தவங்களுக்கு உய்வில்லைங்காம்ல்லா எங்க அப்பம் வள்ளுவன்.

அங்கன போயி ஆகபத்திரில அவளச் சேத்திட்டு நீ வராண்டாவில படுத்துக்கோ. அங்கன போயும் பெரிய வீடு கீடு எடுக்காதன்னு புத்தி வேற சொல்லியிருக்கா. என்னமோ அவ புருசனும் அவளும் கொண்டு போயி பணத்த செலவழிக்கப் பொறது மாதிரி. அவம் ஒரு பிச்சக்காரன விடக் கேவலமான ஆளு.

அவ அண்ணங்காரனுவளோ எல்லாத்திட்டயும் போயி கிட்டுப்பிள்ளையப் போயி கொற சொல்லுறதய தொழிலா வெச்சிருந்தானுவ.

எல அவம் அண்ணன் ஒருத்தன், அவரு மாமனாரு தொழிலுக்குக் கடன் வாங்கும்போது கூடவே ஜாமீன் கையெழுத்துப் போட்டு அந்த ஆளு கோனாரு பொதுச்

சொத்தில் கைவைக்க வந்திட்டாரு. அன்னிக்கு கிட்டுப்பிள்ள முகத்துக்காகத்தாம் அவரு விட்டாரு. அதெல்லாம் எவம்ல நெனக்காம்.

அவனுக்கு என்ன சங்கடம்ன்னா இவம் இருக்காம்லா அவனுக்கு முன்னாலய சைக்கிள் ஒட்டிட்டான். நீச்சல் பழகிட்டாம். தெருவில எல்லா பொம்பளப் புள்ளகளும் இந்தப் பயட்ட பிரியமா இருக்கும். எல்லாம் எனக்கு முன்னாலயே கத்துக்கிட்டானன்னுல்லாம் கோபம். அவம் ஒரு லூசுடா.

இன்னொண்ணு தெரியுமா அவம் வீட்டுக்காரி அவ வீட்டுல போயி ஒக்காந்துக்கிட்டு வர மாட்டேன்னுட்டா. அன்னிக்கு கிட்டுப்பிள்ளலா அவளப் போயிக் கூட்டிட்டு வந்தாம். இன்னொரு அண்ணம் இருக்காம்லா. அவம் திருநீறும் பூச்சும் அவம் ஒரு தடவ ஒரு தகராறுல் கிட்டுப்பிள்ள அம்மை கிராமத்துல போயி ஒக்காந்துக்கிட்டா. அப்பம் கிட்டுப்பிள்ளை அவம் வீட்டுல தென்காசியில இருந்தாம் அவங்க அப்பா கிராமத்தில போயி அந்த அம்மாவச் சரிக்கட்டி கூட்டிட்டு வருவோம்ன்னு போறாங்கன்னு தெரிஞ்ச ஓடன. இவ அண்ணங்காரம் கார எடுத்துக்கிட்டு கிட்டுப்பிள்ளைய கூட்டிட்டுப் போம்போதே அவம் கையில ஒரு கத்தியக் கொடுத்து அப்பாவக் குத்திருன்னிருக்காம். எப்படிப் பய பாத்தியாடே.

பெத்த தகப்பனக் கொல்ல நெனச்சவம். கொன்னிட்டா அம்மைய ஏமாத்தி எல்லாத்தியையும் எழுதி வாங்கிரலாம்ன்னு நெனச்சு. அவனுவ நன்னூல் மாதிரி பேசுதானுவ. அவனுவளுக்கு இவனக் கண்டு பொறாம வேற இவம் புள்ளய ரெண்டு பேரும் புகழுமா ஆயிட்டானுவளா. அதும் தாங்கல.

இவ்வளவு பட்டிருக்காரு என்ன அண்ணாச்சி.

ஒரு அண்ணம் அவ கொழுந்தியாள கட்டிக் குடுக்க ஏற்பாடு பண்ணிருக்காம். கிட்டுப் பிள்ள நாலு பேருகிட்ட பழகுதவம்லா. அந்தக் குடும்பம் ஏற்கனவே ஒரு பிள்ளையக் கல்யாணம் பேசி, கலியாணத்துக்கு மொத நா அந்தப் பிள்ள விட்ட எழுதி குடுத்தாத்தாம் தாலி கட்டுவம்ன்னு சொல்லி அந்தக் கலியாணம் நின்னு போச்சுன்னு. அவ அண்ணம் கேக்கல. பொறவு அதே கதைதான் நடந்தது. பொறவு அந்தப் புள்ள வாயும் வயிறுமா கிட்டுப் பிள்ள வீட்டுக்குத்தாம் வந்துது. அந்த மகராசி கிட்டுப்பிள்ள வீட்டுக்காரிதாம்ல அந்தப் பிள்ளைய பாத்தா. அந்தப் பயலும் கிட்டுப்பிள்ள கிட்டத்தாம் வளந்தாம்.

ஆனா அத்தன பேருக்கும் கிட்டுப்பிள்ள நல்லதுதாம் செஞ்சிருக்காரு.

எல அவம்லால மனுசன். அவம் என்ன சொல்லுவாம் தெரியுமால. நாம் எங்க செஞ்சேம். அவ காந்திமதி செஞ்சா. எனக்குப் பெருமையச் சேத்தாம்பாம். தான் செஞ்சதாவ சொல்ல மாட்டான். வள்ளுவர் சொல்லுவாருலால பணியுமாம் என்றும் பெருமை. அந்தக் குறளுக்கு இலக்கணம்லா கிட்டுப்பிள்ளை.

ஏல அம்பி கிராமத்தில் இருந்து நம்ம ஆவுடையாச்சி பேரன் வாரேன்னிருக்காம். வந்தா ஒக்காரச் சொல்லிட்டு வந்து சொல்லு.

யாரு வேல்மணிதான அண்ணாச்சி. நாம் பாத்துக்கிடுதேம்.

•

எய்யா வா நல்லாஇருக்கியா வயக்காடெல்லாம் எப்படி இருக்கு.

நல்ல இருக்கு அண்ணாச்சி. நீங்க சொன்னப் புறம் பூராம் இயற்கை வெவசாயம் தான் அண்ணாச்சி. நல்ல மரியாதை. அரிசிக்கு வெலையும் கெடைக்கு அண்ணாச்சி.

எல அய்யா இதுதாம் வெவசாயம் இத விட்டுட்டு எங்கனயோ போய் சீரழிஞ்சிட்டு. எது உண்மையோ அத இயற்கை வெவசாயம்ங்கோம் பாத்தியா. நம்ம நாட்டோட தலையெழுத்துல்லாய்யா.

நம்மாழ்வார் மதத்தில புரட்சி பண்ணினவர். அவர் பேர அவ அம்மா அப்பா விட்டதினால தான இவாளும் புரட்சி பண்ணினா. சில பேருக்கு பேர் விட்டா அந்தப் பேரக் காப்பத்திருவாங்க.

அப்படித்தான அவாளும் காப்பாத்திட்டா. சில பேருக்கு மகராசன்னு பேருவிடுவானுவ. அவம் சரியான பிச்சக்காரனா இருப்பாம்.

அது சரி தான் அண்ணாச்சி. நம்மாழ்வார் நம்ம ஆழ்வாதிருநேரிதான.

ஆமா. நம்ம அடிக்கடி போவோம்லா அதாம் எப்படிக் கோயில். அவருக்குன்னே ஒரு சந்நிதி இருக்குல்லால.

அது சரி அண்ணாச்சி அவாள் என்ன புரட்சி செய்தா.

எல எல்லாரும் பெருமாளத் தேடித்தான போவாங்க. அங்கன அவாளத் தேடில்லா பெருமாள் வருவார்.

அவாள்தான் ஒரு பாசுரத்தில சொன்னார். அவனவன் விதிக்கு ஏத்த படி அவனவனுக்குன்னு ஒரு சாமி கும்பிடுத விதி இருக்கு. அதுனால சாமியைக் காட்டிச் சண்ட போடாதீங்கன்னு சொல்லியிருக்காருல்லா. அவம் அவம் அவம் சாமியக் கும்பிட்டுக்கிட்டு மகிழ்ச்சியா இருங்கண்ணு சொல்லியிருக்காருல்லா.

எவம் கேக்காம். அத வச்சு பொழக்கப் பாக்காணுவோ.

சொல்லு வேலு ஓம்வீட்டுக்காரி நல்லா இருக்காளாடே. எப்படிப் பிள்ள அது ஒரு நா காலேல இங்கன வந்திருந்துது. அவரு சங்கரக் கோனார் காலேல பால் பீச்ச வரல்லன்னு ஒங்க மதினி சடச்சுக்கிட்டிருந்தா. பளிச்சின்னு போயி பாலைப் பீச்சி கொண்டுவந்து நாலு செம்பையும் வெச்சிட்டுப் போனா. ஒங்க மதினி ஒடன சம்சாரி வீட்டுப் பிள்ளைல்லான்னு ஒரே பாராட்டு. இவளும் சம்சாரி வீட்டுப் பிள்ளலாடே.

அண்ணாச்சி அது என்ன சம்சாரி வீட்டுப் பிள்ள.

அம்பி வெவசாயக் குடும்பத்த நம்ம ஊரு நாட்டுல சம்சாரி வீடுன்னுதாம் கூப்பிடுவோம். பிள்ளை

அப்படியா அண்ணாச்சி. ஒம்பது பிள்ளை பெத்தவங்களத் தான் கூப்பிடுதேளோன்னு நெனச்சுக்கிட்டு இருந்திருக்கேம்.

எல எய்யா நானே எங்கம்மைக்கு எட்டாவது பிள்ளதானல.

சரி வேற என்ன விசேடம் வேலு.

இல்ல அண்ணாச்சி. எங்க அக்கா கிராமத்துக்கு வந்திருந்தா.

சடவாரவாவே.

ஆமா அண்ணாச்சி.

அதுக்கு என்னா. அவ கை நிறைய காய்கறிக இளநி இருபதுன்னு காணும். காணாததுக்கு இரண்டு அரிசி மூட்டையும்ல்லா வண்டியில ஏத்தி விடுவ. அம்ம மண்டயப் போட்ட பின்னும் எல்லாத்துக்கும் அவ என்ன செஞ்சாளோ அதையெல்லாம் நீ தாம் ஒழுங்காச் செஞ்சிருவிய,

அது இல்ல அண்ணாச்சி. ஒரு நா அங்கன அவ இருந்த போது மழ பெஞ்சுச்சு அண்ணாச்சி. வயக்காட்டுக்குப் போயிருந்தவ.

ஒம் வீட்டுக்காரியாவே.

ஆம அண்ணாச்சி சாக்கத் தலையில் போட்டுக்கிட்டு சொடலமாடன் கூட சைக்கிள்ல வந்தா அண்ணாச்சி. அத ஊரு பூராம் எங்க அக்கா தப்பாப் பேசிருக்கா அண்ணாச்சி.

எய் அவள்ளாம் ஒரு மனுஷின்னு இதப் பொட்டணம் கட்டிட்டு என்கிட்ட சொல்ல வந்தீயோ. ஒம் வீட்டுக்காரியல்லாம் பேசினாளுவளனா வாய் வெந்திடும்வே.

மழைக்கு வந்தா என்ன தப்பு. சொடலமாடன் உழல்லேனு வச்சிக்கோ. விதக்கல்லண்ணு வச்சிக்கோ. அறுக்கலன்னு வச்சிக்கோ. ஓங்க அக்கால்லாம் செத்துத் தான போகணும்.

எல எங்க அப்பம் வள்ளுவரு சொல்லுதாரு உழவன் கைய மடக்கி தலைக்கு வெச்சுப் படுத்திட்டான்னு வையி. தலைவமாரு படிச்சவனுவன்னு பல பயலுவ செத்திருவாம்ன்னு.

ஒனக்கு ஒன்னு சொல்லட்டுமா. இவ இவ புருஷங்காரன் வெச்சிருக்கிற கேசட் கடைப் பயலுக கூட மோட்டார் சைக்கிள்ள போறாள். அதாம்டேஒங்க அக்கா.

மோட்டார் சைக்கிள்ல போனாத் தப்பில்ல. டவுண்ல எவங்கூடப் போனாமல்லும் தப்பில்ல. அத விடு. அந்தப் பிள்ள கிட்ட அவட்டத்தாம்ல் ஆழ்வார் குறிச்சிக்காரிட்ட சொல்லு. அத்தாம் இதையெல்லாம் மனசில வெச்சுக் கிடக் கூடாதுன்னு சொன்னாகன்னு.

நேரில கூட்டிட்டு வாரேன் அண்ணாச்சி. நீங்க சொல்லிட்டா அவளுக்கு ஆறுதலா இருக்கும்.

கூட்டிட்டு வா. வரும் போது முறுக்குச் சுத்திக் கொண்டுகிட்டு வரசொல்லு. நல்லா இரில. நல்லா இரி.



ஏல பஞ்ச வர்ணம் எப்பல வந்த அமெரிக்காவில் இருந்து. புள்ள குட்டில்லாம் நல்லாருக்கா.

ஓங்க வாழ்த்துல நல்லாருக்கோம் அண்ணாச்சி.

புள்ளைல்லாம் தமிழ் பேசுதாடே.

ஆமா அண்ணாச்சி. வீட்டில் நாம் அவங்ககிட்ட தமிழ்ல தாம் பேசுதேம். அதுக, அதனால தமிழ் நல்ல பேசும். படிக்கவும் சொல்லி கொடுக்கேம். எழுதவும் செய்யும்.

நல்ல தமிழனாத் தான் வாழ்ந்துகிட்டிருக்கே. எம்புட்டு மகிழ்ச்சியா இருக்கு கேக்கையிலேயே. நம்ம ராமசாமிப் பய வந்தாம். அவனே இங்கிலீஷ்ல தாம் பேசுதாம். புள்ளைகளுக்கு சுத்தமாத் தமிழ் தெரியல. அவம் வீட்டுக்காரி அமெரிக்காவிலயே பொறந்த மாரில்லா பேசுதா.